. அன்பளிப்பு . திரு . க . சுப்பிரமணிய ஐயரவர்கள்

உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

கோநகர்க்

கற்பகவிநாயக கலாசாலையினின்றும் வெளிவரும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

Vol. 1. 1918–வரு தொகுதி–ம.

பிங்களவரு தைமீ முதல்

காளயுக்திவரு மார்கழிமீ வரை.

பத்திராதிபர்கள்:—

மோ. வே. கோவிந்தராஜையங்கார்.

அரு. ராம. சுப்பிரமணியன்செட்டியார்.

கோநகர்

தன வைசியன் அச்சியந்திரசாலை.

1919.

II

பொருளடக்கம்.

அவதாரநோக்கம்	T. V. வெங்கடராகவலு ஐயர்	102
அகங்காரம்	பத்திராதிபர்	272
அழுக்கைப் போக்குவதெப்படி.	பத்திராதிபர்	277
அரிசிப்போக்குவரத்து		291
அரிசிமார்க்கட்டின் நிலவரம்		354
ஆய் அல்லது அண்டிரான்	சி. கு. நாராயணசாமி முதலியார்	57
இலக்ஷுமி தோத்திரம்	S ஆழ்வாரையங்கார்	95
இந்திய தேசாந்தரி		115
இந்தியாவும் ஜர்மானிய யுத்தமும்	T. V. வெங்கடராகவலு ஐயர்	190
இரங்கற்பாக்கள்	வே. முத்துசாமிஐயர்	194
இந்துசக்தி	பத்திராதிபர்	209
இந்து வைத்தியம்	அ. சௌமியநாராயணையங்கார்	298
இந்தியாவைப்பற்றி மிஸ்டர் ஜி பி. கூச் என்பவர் அபிப்பிராயம்		321
இன்ப்ளுயன்ஸா பம்பாய் ஜ்வரம் அல்லது மாயாஜ்வரம்	பத்திராதிபர்	351
இல்வாழ்க்கை இயல்	சி. கு. நாராயணசாமி முதலியார்	413
இந்திரைமாலை	S. ஆழ்வாரையங்கார்	417
ஹைன்பித்தியார்		154
எப்பொழுது வேதாந்தம் எதற்காக வேதாந்தம்	P. R. வெங்கடராமன்	372,465
ஓர் வேண்டுகோள்		419
கனம் ஈ எஸ் மாண்டேகு அவர்கள் விஜயம்	பத்திராதிபர்	16
காசிஹிந்துஸர்வகலாசங்கத்தின் சாஸனம்	ஷை	97
காலஞ்சென்ற ஸர் சுந்தரலாலர்	ஷை	169
காரைக்குடி மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியாரவர்களது உபகாரச்செயல்	ஷை	329
காங்கிரஸ் கமிட்டியாரின் முதல் அறிக்கை	ஜி. எ. நடேசன்	889

முயற்சி	G. இராமசாமி ஐயங்கார்	366
மோர்ப்புல்		335
ராம்மோகன்ராய்	வி. வாசுதேவன்	190
வஞ்சிமாநகராராய்ச்சி		9, 49, 88, 145, 165, 224
வாழ்த்துக்கவிகள்	வே. முத்துஸாமிஐயர்	104
விடுகதைவினாவுக் குவிடை		24, 118, 136
வித்தியாபாநுவின் வேலீசாசம்		46
விடுகதைவினா		64, 240, 256
விளம்பரம்		400
வைத்தியக்குறிப்புகள்		24, 76, 269, 355
ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸ பகவான்	T. V. வெங்கடராகவஐயர்	258

உ

கணபதிதுணை.

வித்யாபாநு

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக” — திருக்குறள்.

தொகுதி 10	பிங்கள௵ தை௴	பகுதி 1.
Vol. X.	February 1918.	No. 1.

நமது பத்திரிகை.

உலகமெல்லாம் யுத்தமுகத்திலேயே ஒருமுகப்பட்டிருக்கிறபோது இந்தப் புதுவருஷம் ஆரம்பித்திருக்கிறது. நமது பாநுவும் தனது ஒன்பதாவதுவயதில் தேசபாஷையிலும் தேசதர்மத்திலும் தேசமதத்திலும் தேசாசாரத்திலுமே கல்வி கற்கவேண்டுமென்று ஊக்கங்காட்டி இப்போது தனது பத்தாவது வயதில் முதலாவது மாதத்தைத் தொடங்கியிருக்கிறது.

இந்தயுத்தம் முடிந்தவுடன் அரசாங்கத்தார் இந்தியாவின் விஷயமாய்ப் பலதுறைகளில் இறங்கிச் சீர்திருத்தம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவற்றுள் முக்கியமானது கல்வித்துறையின் சீர்திருத்தம். அந்தச்சீர்திருத்தமும் இதுவரையிலும்நடத்தப்பட்டுவந்தமுறைப்படி இனியும் நடத்தப்படாமல் தேசமுன்னேற்றத்துக்குத்தக்கபடியே சீர்திருத்தப்பட வேண்டுமென்று பலமேதாவிகளுடைய பிரார்த்தனை. சுமார் 500வருஷகாலங்களாக நடந்துவந்த முறையினால் தேசத்துக்கு யாதொரு முக்கியவுதவியையுந்தராமல் தேசதர்மம் முதலியவற்றையுங் குலைத்திருக்கிறதென்று ஒருவாறாகச் சென்றதொகுதியின் கடைப்பகுதியிற் குறித்திருக்கிறோம். இந்தத்தொகுதியின் ஆரம்பத்தில், சென்றவருஷத்திற் கல்வித்துறையின் வளர்ச்சி எவ்வாறிருந்ததென்று

ஒருவாறு குறிக்கப்புகுவோமாக. அந்தவளர்ச்சி தேசமுன்னேற் றத்துக்கு ஒருசிறிதும் பயனிலதாயினும் அதனைக்குறித்துப் பிறகு ஆகவேண்டிய சீர்திருத்தத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கி ரோம்.

கல்வியின் ஒருவருஷத்து முன்னேற்றம்.

ஆங்கிலஇந்தியா.

ஆரம்பக்கல்விமுறையிற் பள்ளிக்கூடங்கள் 6397 ஆகவும் அதற் குரிய மாணவர்கள் 191.061 ஆகவும் அதிகப்பட்டிருப்பதாக அறிகி ரோம். ஆரம்பக் கல்விச்சாலைகளின் விஷயத்தில் நமது சென்னை மாகாணமே அதிக மாணவர்களைப்பெற்றிருக்கிறது. சென்ற பிப்ரவரி மாதத்திற் கனம் B. N. சர்மா அவர்கள், "ஆரம்பக் கல்விமுறை பொதுவாகவும் இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்கப்படவேண்டு" மென்று ஒருயோசனையைச் சட்டசபையின்முன் கொண்டுவந்தார்கள். அது தள்ளப்பட்டுப்போயிற்று.

பம்பாயில் மிஸ்டர் பேடல் கொண்டுவந்த யோசனை அரசாங்கத் தாரால் அங்கீகரிக்கப்பட்டு, நகரபரிபாலன சங்கத்தார், தங்கட்கு இத ற்கு முன்னம் அரசாங்கத்தாராற்கொடுக்கப்பட்டிருக்கும் உத்தரவின் படி தங்கள் தங்கள் நகரங்களில் ஆரம்பக்கல்விமுறையை இலவசமாக வும் கட்டாயமாகவும் கற்பிக்கக்கடமைப் பட்டிருக்கிறார்களென்று தீர் மானத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சில அசந்தர்ப்பங்களாலும்நகர பரிபாலன சபையின் பணக்குறைவினாலும் மிஸ்டர் பேடல் முறை நடத்தப்படமுடியவில்லை. ஏகாதிபத்திய ராஜாங்கத்தார் இந்தவிஷயத் திற் பொறுப்பேற்றுக் கொள்ளாதவரையில், அம்முறையில் யாதொரு விருத்தியையும் காணமாட்டோமென்று ஊஹிக்க இடமாகிறது.

உயர்தரப்படிப்பில் மத்யதரப்பாடசாலைகள் 293 ஆகவும்,29,887 மாணவர்களையுடையனவாகவும் விருத்தியடைந்திருக்கின்றன. பங் காளராஜதானியானது, பர்மா தவிர மற்றப் பெரிய நான்குமாகாணங்க ளிலும் பாடசாலைகளாலும் மாணவர்களாலும் அதிகரித்திருக்கின்றது. அதற்கு அடுத்ததரமாகப் பர்மாவானது கல்விச்சாலைகளிலும் சென்னை மாணவர்களிலும் அதிகரித்திருக்கின்றது. காலேஜ் வகைகளிற் சித் திரவித்தையில் ஒன்று குறைந்தும் தொழிலிலாகாவில் சிறிது உயர்ந்

தும் இருக்கின்றது. ஆக, இது, 'இந்தியாவில் உயர்தரக்கலாசாலைப் படிப்புகள் அவற்றுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடினவிதிகளாலும் அவற்றின் முன்னேற்றத்துக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பலவித மான தடங்கல்களாலும் அதிகவிருத்தியைக் காட்டவில்லையென்று காட்டுகின்றது.

பழைய சர்வகலாசங்கங்களிலுங்கூட வெகுவிரைவிற் சிலமாறு தல்கள் தோன்றக்கூடுமென்பது எதிர்பார்க்கப்படுகின்றது. கல்கத்தா சர்வகலா சங்கத்தின் எல்லாவேலைகளையும் விசாரணைசெய்துவரும்படி ஒரு விசாரணைச் சங்கம் ஏற்படுத்தப்பெற்று அதன்வேலையை ஆரம் பித்திருக்கின்றது. மற்றச்சங்கங்களிலும் இதே மாதிரி ஆரம்பித் தால்தான் நன்மை எதிர்பார்க்கப்படும் என்பது ஊஹிக்கப்படுகிறது. புதியசர்வகலாசங்கங்களுள்,டெக்காச்சங்கம் ஆரம்பிக்கும்படி உத்தேச மாயிருக்கிறது. பாட்னச்சங்கமானது, கனம் மஸருல்ஹக் கினுடைய தூண்டுதலுக்குப்பிறகு தீர்மானிக்கப்பட்டு நடந்துவருகிறது. காசி ஹிந்து சர்வகலாசங்கமும் வெகுவிரைவில் தனதுவேலையை ஆரம்பிக் கும். அதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளெல்லாம் ஏற்பாடாகி முற் றும் முடிந்திருக்கின்றன. கட்டடத்துக்கு வேண்டியநிலங்களும் ஏற் பாடுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நடத்தவேண்டியமுறைகளும் கல்வியின் அளவைகளும் பேசப்பட்டு முடிவடைந்திருக்கின்றன. இந்தியப்போதனுமுறையிலும் படிப்பிலும் தேர்ச்சிபெற்றுப் பிரசித்தி யடைந்திருக்கும் அனேகம் மேதாவிகள் இந்தச்சங்கத்திற்குப் போத காசிரியர்களாயிருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கல்விகற்பிப்பதி லும் பரீக்ஷிப்பதிலும் ஒழுங்கானவேலை கூடியவிரைவில் ஆரம்பிக்கப் படும் என்று நம்பப்படுகின்றது.

பர்மாவிலும் கல்வி விருத்தியடைந்துவருதலுக்கு அநுகுணமாக ஒரு சர்வகலாசங்கத்துக்கு வெகுவிரைவில் ஏற்பாடு ஆகுமென்று ஊஹிக்கப்படுகின்றது.

பெண்கல்விமுறையில் "சமீபவருஷங்களில் விருத்தியடைந்து வந்திருக்கிறது; பெண்கட்கும் ஸ்திரீகட்கும் கல்வியில் அபிவிருத்தி யைக் காட்டவேண்டுமென்னும் எண்ணம் பிறந்திருக்கிறது" என்று கவர்ண்மெண்ட் ரிபோர்ட் சொல்லுகிறது. ஆனால்அதற்குவேண்டிய

உதவிகள் விரைந்துகொடுக்கப்படவில்லையாகையால் இந்தியாவில் ஐந்து ஆண்கட்கு ஒருபெண்தான் கல்விமுறையிற் பிரவேசித்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையிலும் இவ்வளவு காலமாக ஆண்கல்வியிற் காட்டிவந்தமாதிரியான ஜீவனில்லா முறை பெண்கல்வியிலும் காட்டப்படுமானல் தேசாசாரமும்தேசாபிமானமும் அழிந்து தேசம் முன்னேறுவதற்கு இடமில்லாமற்போய்விடும். ஆதலினல் இந்தப்பெண்கல்விமுறையில் இப்போதிருந்தே தேச வொழுங்கு காட்டப்பட்டுவருதல் நலமாகும். பெண்களைப் படிப்பிப்பதில் தேச நன்மையே மூலகாரணமாகக் கொள்ளப்படல் வேண்டும். திகாரி மகாராஜாகுமாரர் பெண்கல்வியின்நிமித்தம் பத்துலக்ஷம்ரூபாய்களையுதவியது நல்லுதவியேயாகும். ஏற்ப முறையும் நன்முறையாகக் கவனிக்கப்படல்வேண்டியதே.

இந்தியாவிற் கல்விஸ்தாபனங்களின் செலவுதொகைகளைக்காட்டக்கூடிய ரிப்போர்ட் ஒன்றைச் சென்ற செப்டம்பர்மாதத்துக்கூடிய சபையின் முன்பாகக்கேட்டகேள்விக்குப் பிரதியுத்தரமாகக் கனம் ஸர் சங்கரநாயர் அவர்கள், இந்தியாவிலும் மற்றச் சுயஆட்சிபெற்ற தேசங்களிலும் ஏற்பட்டிருக்கும் கல்விமுறையின் செலவுகட்கு ஒரு அட்டவணைகாட்டி இந்தியாவானது மிகவும் தாழ்ந்தநிலையில் இருக்கிறதைக் காட்டியிருக்கிறார்கள். ஆகையால், இந்தியா கல்விமுறையில் முன்னேற்றமடைய, “ நாம் அரசாட்சிமுறையிற்கோரிய ஒரு சீர்திருத்தத்தைப்பெற்றுலொழியக் கல்விமுறையிற் சீர்திருத்தம்பெற முடியாது” என்று டாக்டர் தேஜ் பஹதூர் ஸப்ரூ சொன்னபடி அரசாங்கமுறையும் சீர்திருத்தமடையவேண்டுவதை எதிர்பார்க்கிறோம்.

சுதேசமாகாணங்கள்.

ஆரம்பக்கல்வி சுதேசமாகாணங்களிலெல்லாம் இலவசமாகவே ஏற்படுத்தப் பெற்றிருக்கிறதாயினும், பரோடா மைசூர் மாகாணங்களைப்போலக் கட்டாயப்படிப்பாக வைக்கப்பெறவில்லை. பரோடாவில், ஆங்கிலக் கல்விச்சாலையிலும் சுதேசபாஷைச்சாலையிலும் கட்டாயப் படிப்பின் ஆரம்பக்காலமானது ஆண்கட்கு வயது ஆறென்றும் பெண்கட்கு வயது ஏழென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் பரோடாவில் புஸ்தகசாலைகளும் விருத்திசெய்யப்பெற்று ஒவ்வொரு

நகரத்திலும் வாசகசாலை ஏற்படுத்தப்பெற்றிருப்பதுடன் சஞ்சாரவாசக சாலையென்றும் ஏற்படுத்திக் கிராமவாசிகளும் படிப்பின் நன்மையடையு மாறு செய்யப்பட்டிருக்கிறது. உபதேசகர்களையும் அதிகமாக ஏற்படுத் திப் பாமரஜனங்கட்கும் கல்வியைப் போதித்துவருகின்றார்கள். மை சூரில், வருஷவரும்படியில் எட்டில் ஒருபாகம் கல்விவிஷயத்திற் செலவு செய்ய ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். ஆரம்பப்பாடசாலைகள் சுமார் 500 ஆக அதிகப்பட்டிருக்கின்றன. மொத்தமாணவர்கள் ஆண் களில் 72, 000மும் பெண்கள் 4800ம் ஆக விருத்தியடைந்திருக்கிறார் கள். மாணவர்களின் தொகை சென்ற ஐந்துவருஷங்கட்குள் இரட்டிப் புத் தொகைக்கு வந்திருக்கிறது. சென்ற மாகாணக் கூட்டத்திற் கல்வியை இன்னும் அதிகப் பெருக்கத்துக்குக் கொண்டுவரவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி ஆலோசித்திருக்கிறார்கள். சென்றவருஷம் ஏற் படுத்தப் பெற்றிருக்கும் சர்வகலாசங்கமானது தனது வேலையை ஆரம் பித்திருக்கிறது. இன்ஜினீரிங் தொழிற்சாலைகளும் வியாபாரத்தொழிற் சாலைகளும் ஆரம்பிக்கப்பெற்று நன்றாய் நடந்துவருகின்றன. இப் போது வைத்தியத் தொழிற்சாலைகளும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

திருவாங்கூர் மாகாணம் பரோடா மைசூர் மாகாணங்களைப்போ லப் பெருக்கத்தைக்காட்டாவிடினும் கல்விவிஷயமாக மிகவும் சிரத் தைகாட்டிவருகிறது என்று சொல்லலாம். சென்ற நவம்பர் 30உ காணப்பட்டிருக்கிற விவரப்படி ஆங்கிலக் கல்வியிலும் இங்கிலீஷ் சரித்திரக் கல்வியிலும் முற்போக்கை யடைந்திருப்பதாத் தெரிகின் றது. தற்காலக் கணக்குவிவரப்படி மொத்தத்தில் 83 வித்தியாசாலைகள் 23, 608 மாணவர்களுடன் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இவர்க ளெல்லாம் ஆண்மக்களே. இந்த இந்திய மாகாணத்திற் பெண்கள் விஷயம் மேன்மையாகவே கவனிக்கப்படுகிறது. 1864-ம் வருஷம் முதலே இந்த மாகாணத்திற் பெண்கல்வி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 1897-ம் வருஷத்தில் மாஹாராஜா பெண்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு இண்டர்மீடியட் படிப்புவரையிலும் போதிக்கப்பெற்றுவருகிறது. திருவாங்கூர் மாகாணம் சுதேச பாஷாவித்தையில் ஆண்களிலும் பெண்களிலும் மற்ற மாகாணங்களைக்காட்டிலும் அதிகமாய்ப் பரவி யிருக்கிறதென்றே சொல்லலாம். ஆரம்பப்படிப்பு இலவசமாகத்தான்

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனைக் கட்டாயப்படிப்பாகவும் ஆக்கி விடவேண்டுமென்ற கிளர்ச்சி ஜனங்களுக்குள் உண்டாயிருக்கிறது.. அதுவும் கூடியவிரைவிற் பலனைக் கொடுக்குமென்றே எண்ணுகிறோம். இப்போது இம்மாகாணத்தில் ஒரு சர்வகலாசங்கத்தை ஏற்படுத்த ஊக்கங்காட்டிவருகிறார்கள். அங்கு இருக்கும் பள்ளிக்கூடங்களின் தொகையை உத்தேசிக்க, அவசியம் ஒரு சர்வகலாசங்கம் இருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. அந்த மாகாண கவர்ன்மெண்டாரும் இதற்கென்று ஒரு சபை ஏற்படுத்தியிருக்கிறபடியாற் கூடிய விரைவில் ஒரு சர்வகலாசங்கம் ஏற்படு மென்றும் எதிர்பார்க்கிறோம். இந்தச்சங்கம் கோச்சிமாகாணத்திலுள்ள கல்லூரிகளையும் தன்னுள் அடக்கியிருக்கு மென்று குறிக்கப்படுகிறது.

நிஜாம் ராஜ்யத்திற் கல்விநிலைமை மற்றமாகாணங்களைக் காட்டிலும் தாழ்ந்திருந்தாலும், சமீபகாலமாக, ஏழைகளின் கல்வியபிவிருத்தியில் ஊக்கங்காட்டிவரக் கவர்ன்மெண்டார் முயற்சி செய்துவருகிறார்கள். நிஜாம் அவர்களும் வெகுவிரைவில் ஒரு உஸ்மானியா (மகம்மதிய) சர்வகலாசங்கத்தை ஏற்படுத்தவும், அதற்கு உருதுபாஷையையே பிரதானபாஷையாக ஏற்படுத்தவும் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இதனையும் வெகுவிரைவில் எதிர்பார்க்கிறோம்.

சென்னையிற் சர்வகலாசங்கம்.

சாட்லர் சாதனம் என்னும் சர்வகலாசங்க விசாரணைக் கூட்டமானது வெகு விரைவிற் சென்னைக்குவந்து, இத்தராஜதானியிற் சர்வகலாசங்கக்கல்வியின் நிலைமையை விசாரிக்குமென்று கருதப்படுகிறது. இதன்முன்வியாஸத்தில் நாம் குறித்துள்ளபடியான பழைய சர்வகலாசங்கங்களின் விருத்தியம்சத்தையே நாடி இந்தவிசாரணைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் விசாரணை மெம்பர்கள் அதற்குச் சாக்ஷியம் சொல்லுபவர்கள் ஆகிய இவர்களையே பொறுத்திருக்கிறது இந்தக்கூட்டத்தின்பயனுகையாற் சாக்ஷிசொல்பவர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டுவதுடன், சாக்ஷிசொல்பவர்களும் தாக்ஷிண்யத்துக்குக் கட்டுப்பட்டு விஷயங்களை வழவழ வென்று உழக்கிவிடாமல் உண்மையை உள்ளபடி சொன்னால்மாத்திரந்தான் இந்தக்கூட்டத்தாரால் நன்மையை எதிர்பார்க்கலாம். லார்ட் கர்ஸன் கல்விமுறையை யநுசரித்தே சர்வகலாசங்கத்து அங்கத்தினர் ஏற்படுத்தப் பெற்றிருக்கிற

படியால், விசாரணைக்கர்த்தர்களைப்பற்றியவரையில் நமக்கு ஒருதுணியும் பிறக்கவில்லை. இத்தகைய கூட்டங்களில் ஆங்கில இந்திய அங்கத்தினரைக் காட்டிலும் இந்திய அங்கத்தினர்களே அதிகமாக இருந்தால்தான் நாம் பயனை எதிர்பார்க்கலாம். ஏனெனில் கல்விவிஷயமாக வேறெந்தவிஷயமாகவோ ஒரு கூட்டம் கூடிப் பேச ஆரம்பிக்கும் போது ஆங்கில இந்தியர் தவறாமல் முன்வந்து அதன் முன்னேற்றத்தைத் தடுத்துவரக் காண்கிறோம். இவ்விஷயம் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் சென்னைமாகாணத்தில் அடிக்கடி நடைபெறுகிறது. இம்மாதிரியான விசாரணைக்கூட்டங்கள் அடிக்கடி பொதுஜன அபிப்பிராயத்தைத் தடுத்துத் தமது தீர்மானங்களைச் செய்யுமாயின், பொதுஜனங்கட்கு நன்மையென்பது எப்படி எதிர்பார்க்கப்படுவதாகும். ஆகையால, கல்விவிஷயத்திலேனும் வேறெந்த விஷயத்திலேனும் ஒரு நாடு முன்னேறவேண்டுவதாயின், அந்தநாட்டு அரசாட்சியில், அந்தநாட்டுப் பொதுஜனங்கட்குத் தகுந்த செல்வாக்கு அவசியம் இருக்கவேண்டுமென்பதை நன்றாய் அறிகிறோமல்லவா?

பத்திராதிபர்.

புதுக்கோட்டைராஜ்யம்.

ஒன்பதாந்தொகுதியின் 429-ம் பக்கத்தொடர்ச்சி.

சாகுபடி:-1886-ம் வருஷத்திற் சாகுபடிக்குத் தக்கதாக விருந்த நிலங்கள் 4,33,255 ஏகர்களே. 1912-ம் வருஷத்தில் அவைகள் 4,63,298 ஏகர் நிலங்களாகச் செய்யப்பெற்றன. சுமார் ஒரு 30,000 ஏகர்களே அந்த இருபத்தாறு வருஷங்களிற் சேய்நேர்த்தியாக்கப்பட்டிருக்கின்றன வென்று வெளியாகிறது. அவற்றுக்கேற்ப 1886-ம் வருஷத்தில் 41,769-ஆகஇருந்த பயிர்செய்வோரின் தொகை 1911-ம் வருஷத்தில் 78,330 ஆகவும், 3,13, 654 ஆக இருந்த மாடுகளின் தொகை 5,34,892 ஆகவும், 24,417 ஆக இருந்த கலப்பைகளின் தொகை 53,433 ஆகவும் பெருக்கப் பெற்றிருக்கின்றன.

இன்னும்,நன்செய் புன்செய்களுக்குத் தகுதியாக்கலாமான நிலங்கள், சுமார் 50,000 ஏகர்கள் அளவுக்கு இருக்கின்றன. 1903-ம் வருஷத்தில் ஒரு தனியான இலாகா ஏற்படுத்தி, தரிசாகக்கிடக்கும் நிலங்களைப் பயிர்செய்யும் பக்குவத்துக்குக் கொண்டுவரவேண்டிய முயற்சிசெய்யப்பட்டிருக்கிறது.

ஸர் சேஷையாசாஸ்திரிகள் விசாரணையைஏற்றுக்கொண்டபோது 1878-ம் வருஷத்தில் நீண்ட பிரதேசங்கள் அமானியாகக்கிடந்தன.

நிலவரி வசூல் மொத்தத்தில் ஒருவருஷத்துக்கு மூன்றுலக்ஷம் ரூபாவுக்குமேல் இல்லையென்று முன்னமே குறித்திருக்கிறோம். வரிவசூல் தொகையைக்கொண்டே அரசாங்கம் நடைபெறவேண்டியிருக்கிறதாகையால், முதன்முதலில் அர்த்தவிஷயமே கவனிக்கத்தகுந்ததாக இருந்தது. ஆகையால், 1879-ம் வருஷத்தில் அந்தவேலை ஆரம்பிக்கப்பட்டுப் பழைய வழக்கங்களையெல்லாம் தள்ளிவிட்டுப் புதிய வழக்கங்களை ஏற்படுத்திக்கொடுத்து நிலங்களைப் பண்படுத்தி வரிகளும் வசூலிக்கப்பட்டன. நிலங்கள் அமானி நிலைமையில் இருந்தபோது நன்செய்நிலங்கள் ஒருவேலிக்கு ரூ18 முதல் ரூ25 வரையிலும்தான் வசூலிக்கப்பட்டுவந்தன. ஆகையால், அடுத்த பிரிட்டிஷ் மாகாண நிலங்கட்கு ஒப்ப நிலவரிவசூல்செய்யும்பொருட்டு ஒரு ரெவின்யூ சர்வே (வருமான நிலஅளவை) ஆரம்பிக்கப்பட்டு 1895-ம் வருஷம் முதல் 1903-ம் வருஷம்வரையில் வேலைசெய்தது. இந்தச் சர்வே முடிந்தவுடனே வரிவசூல் செய்வதும் கூடாமையாயிருந்தது. இந்த வரிவசூலை ஆரம்பிப்பதற்குமுன்னே வருமானக்கணக்குகளைச் சீர்திருத்தி நிலமுடையவர்கள் இன்னின்னாரென்னும் அட்டவணை எடுக்கப்பெற்றுச் சீர்திருத்தமும் செய்யப்பெற்றது. 1908-ம் வருஷத்தில்தான் சரியான தீர்மானம் ஆரம்பிக்கப்பட்டு 1912-ம் வருஷம்தான் முடிவுக்குவந்தது. இந்தப் புதுத்தீர்மானம் அடுத்த பிரிட்டிஷ் மாகாண நிலங்களைப்போல வரும்படியைக்கொடுக்கும் அளவுக்குக் கொண்டுவந்துவிட்டது. பழையவழக்கங்களில் இரண்டுமாத்திரம் அப்படியே தங்கவைத்துக்கொள்ளப்பட்டன. விளைவு குறைந்ததற்காக மன்னிப்பாவது இரட்டிப்புவரியாவது இல்லை. அமானிப்படியான ஒழுங்கிற் குடியானவர்கள் ஒருதரம் கொண்டகவலை ரத்துசெய்துகொள்ளக் கூடாதவர்களாக இருந்தார்கள். ஆதலால் அதற்குத்தகுதியான ஏற்பாடு ஆரம்பிக்கப்பட்டுக் குடியானவர்கட்கு விளைவின் பலனை அநுபவிக்கக்கூடிய காலம் தாராளமாகக் கொடுக்கப்பட்டுப் பணவுதவியும் செய்துகொடுக்கப்பட்டு ஊக்கம் காட்டப்பட்டது. அவ்வளவு காலத்திலும் அந்தநிலங்கள் அவர்கட்குப் பலனளிக்காதிருக்குமானாற் கவலையும் ரத்துசெய்துகொள்ள இடமும் கொடுக்கப்பட்டது. இத்தகைய முயற்சிகளினால் சென்ற சிலவருஷகாலங்களாக நில வரிவசூல் சிறிது பெருக்கத்தைக் காட்டிவருகின்றது. நிலங்களுக்குப் பாசனபலங்களும் காவல்களும் ஏற்படுத்தப்பெற்று விளைபொருள்கள் நிலக்காரர்கட்குத் தக்க தைரியத்தைக்கொடுத்துவருகின்றன. அதனால் குடியானவர்களும் க்ஷேமத்தை யடைந்துவருகிறார்கள். அரசாட்சியும் சீரடைந்துவருகிறது.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

பூர்வபீடிகை.

சிலப்பதிகாரமுதலிய சங்கநூல்களிற்சொல்லப்பட்ட சோர்தலைநகராகிய வஞ்சிமாநகரம், கொங்கிற்கருவூராமென்று ஒருசாராரும், கடன்மலைநாட்டதென்று மற்றொருசாராரும் வாதப்பிரதிவாதமான வியாசங்களெழுதிப் புத்தகரூபமாகவும், பத்திரிகைவாயிலாகவும் வெளியிட்டுவந்திருப்பது பலரும் அறிந்ததே.

அவருள் கொங்கிற்கருவூராமென்பார் வாதகக்ஷியாரும், அஃதன்றென்பார் எதிர்வாதகக்ஷியாருமாகின்றார்கள். இவ்விருதிறக்கக்ஷியுள் வாதகக்ஷியினின்று சேதுசமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. ராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகைவாயிலாகவும், புத்தகரூபமாகவும் எழுதி வெளியிட்ட "வஞ்சிமாநகர்" என்ற வியாசமானது, படிப்பவர் பலரும் அதனுட்சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் உண்மையுள்ளனவேயென மயங்குமாறு புலமைத்திறமைகொண்டெழுதப்பட்டிருக்கிறது. அவ்விஷயங்கள் பலநூற்றாண்டுகளுக்குமுன்னரேயிருந்து பலகலையுமாராய்ந்த ப்ராமாணிகரான சைவவைணவ சமயாசாரிய பரம்பரையிலுள்ளார் கொள்கைக்கும், சிலப்பதிகாரநூலாசிரியர் உரையாசிரியர்முதலிய புலவர்பெருமக்கள் கொள்கைக்கும், சங்கமருவியசான்றோராகிய நல்லிசைப்புலவர்கொள்கைக்கும் மாறாகத்தோன்றுவதால், அவற்றைப் பலருமாராய்ந்துதெளிந்தே அவற்றின் உண்மையுணரவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். அவருள் நானுமொருவனாகையால் அதிற்காட்டிய பிரமாணங்களைக்கொண்டே என்னறிவிற்கெட்டியமட்டில் ஆராய்ச்சிசெய்ததில், எனக்குத்தோன்றிய ஆக்ஷேபங்களைப் பிறருமறியுமாறு மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவரான மாட்சிமைதங்கிய சேதுமன்னரவர்களிட்ட கட்டளையைமேற்கொண்டு இஃதெழுதப்படுகிறது.

வாதகக்ஷியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குமண்டலமானது 'கொங்கன்' என்னும் ஒரு சேரனாலாளப்பட்டதுபற்றிக் கொங்கனாடென்று பெயர் பெற்றிருப்பதாலும்,

(2) அது சேரநாட்டுக்குரிய 'குடபுலம்' என்னும் பெயர் பெற்றிருப்பதாலும்,

(3) சேரர்குலத்தவர் சிலரைக் கொங்கர்கோவென்று நூல்கள் வழங்குவதாலும்,

(4) சேரர்க்குரியதாகச்சொல்லிய கொல்லிமலை அக்கொங்கு நாட்டின் அருகுள்ளதாயிருத்தலாலும், அது சேரமண்டலமேயாகுமென்றும்;

II. (1) அந்நாட்டிலுள்ள ஆம்பிராவதிநதிக்கு ஆன்பொருநை யென்னும் பெயருண்மையால் அதுவே சேரர்க்குரிய குடபுலவஞ்சியை அடுத்தோடுவதாகச் சங்கநூல்களிற் சொல்லும் ஆன்பொருநையென்றும்,

(2) ஆதலால் அவ்வான்பொருநையாற்றையும் கொல்லிமலையையும் அடுத்துள்ள கொங்கிற்கருவூர்க்கு வஞ்சியென்னும் பெயருமுண்மையால், அதுவே அவ்விருபெயர்களுமொருங்குடையதாகச் சங்கநூல்களிற் கூறப்பட்ட குடபுலவஞ்சியாமென்றும்,

(3) இவ்வாற்றால் அகநாட்டுள்ளதாகப்பெறப்பட்ட குடபுலவஞ்சியைக்கடன்மலைநாட்டுள்ளதாகச் சிலப்பதிகாரவுரையாசிரியர் குறிப்பது தவறென்றும் கூறுவனவர்ம். இவ்விஷயங்களை நிரூபிக்கவேண்டி அவர்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதகக்ஷிக்கனுகூலமாகும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும் பலவுள்ளன.

எதிர்வாதகக்ஷியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குநாடு இடைநாடாயிருப்பதால் அது, புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்றும், குடகொங்கு, குடபுலம் என வழங்குதல் அந்நாட்டின் குடபகுதியையாதலா லது குணபுலம் என்பதுபோலும் மண்டலவாசகமாகாதென்றும்,

(2) ஆதலால் அது குடபுலமென்றுசொல்லப்பட்ட பழைய சேரராஜ்யமில்லையென்றும்,

II. (1) பழையசேரராஜ்யத்திலுள்ளதாகச் சங்கநூல்களாலும், சிலப்பதிகார வுரையாசிரியர்களாலும் சொல்லப்பட்ட குடபுலவஞ்சியென்னும் கருவூரே சேரரது பழைய ராஜதானிநகரமென்றும்,

(2) கொங்குநாட்டுள்ள கருவூர் முன்பு குணபுலத்தரசராகிய சோழர்க்குரியதாயிருந்து பின்பு கொங்குநாட்டிற்சேர்ந்ததென்றும்,

(3) அதனையடுத்துள்ள கொல்லிமலை சோழருடைய கொல்லிமலையென்றும்,

(4) ஆதலால் அது சேரர்கொல்லிமலையாகாதென்றும்,

(5) சேரர்கொல்லி சேரர்நாடாகியகுடபுலத்துள்ளதென்றும்,

(6) சேரர்கருவூர்க்கருகோடுவதாகச் சங்கநூல்களிற்சொல்லிய ஆன்பொருநையாறு கொங்கிற்கருவூர்க்கருகோடும் ஆம்பிராவதிநதியாகாதென்றும்,

(7) அது சேரமண்டலத்திலோடும்பேரியாறேயாகுமென்றும்,

(8) பெயரொற்றுமைகொண்டு கொங்கிற்கருவூர் முதலியவற்றைச் சேரர்கருவூர்முதலியனவாகச்சொல்வதுபொருந்தாதென்றுங் கூறுவனவாம்.

இவ்விஷயங்களை நிரூபிக்கவேண்டி இவர்சொல்லும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், வாதகக்ஷிக்கு அநுகூலமாகக்காட்டும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும் பலவுள.

இங்ஙனங்கூறும் இருதலைவிவகாரங்களும் பின்பு ஆங்காங்கு விவரித்துரைக்கப்படும்.

இவ்விருகக்ஷியுள்ளும், வாதகக்ஷியானது புதிதாயோருண்மையை நிலைநாட்ட முயலுதலால், அது ஒருவாற்றானும் ஆக்ஷேபிக்கப்படாதிருந்தாலல்லது உண்மையை நிலைநாட்டமாட்டாதென்பது யாவருமறிந்ததே; எதிர்வாதகக்ஷியோவென்றால், அது தான்கொண்டகொள்கையை நிலைநாட்டவேண்டுமென்ற பொறுப்பொன்றுமின்றியே வாத

கக்ஷிக்கு ஆக்ஷேபஞ்சொல்லும் அவ்வளவேகொண்டு எளிதில் வெற்றி பெறக்கூடிய வியல்புடையதாகுமென்பதும் யாவருமறிந்ததே. இவ்விரண்டனுள், உலகத்தோரறியாததொன்றைப் புதிதாகக்கண்டறிய வேண்டி அரிதாகமுயன்றறிந்த தங்கொள்கையைப் பல பிரமாணங்களாலும், எதிர்வாதத்தாலாக்ஷேபிக்கப்படாதிருக்கும்படி நிலைநாட்ட வேண்டும் பொறுப்புமிக்குடைய வாதககக்ஷியானது தோல்வியடைந்தாலும் அதனால் அதற்கு ஒரு சிறுமையுண்டாகமாட்டாது. அத்துணை பொறுப்பேலாது எளிதிலாக்ஷேபித்துநிற்கும் எதிர்வாதககக்ஷியானது வெற்றியடைந்தாலும், அதனாலதற்கு ஒரு பெருமையுமில்லை. ஆதலால் உபயகக்ஷியினுமுண்டாகத்தக்க வெற்றி தோல்விகளாலுண்டாகும் பெருமை சிறுமைகளை விஷயமாகக்கொள்ளாது வாதககக்ஷியிற்சொல்லும் விஷயங்களின் உண்மையொன்றேயுணரவேண்டி அவற்றிலுள்ள ஆக்ஷேபங்களை எடுத்துக்காட்டத்தொடங்கிய இவ்வாராய்ச்சியுள் முதலில், வாதககக்ஷியார் சுருக்கமாகச்சொல்லிய முடிவுரையாயுள்ள "கொங்குகுடபுலமாம்" என்பதன் வாக்கியார்த்தத்தை விசாரிப்போமாக.

2. வாதமுடிவுரையாராய்வு.

1. வாதககக்ஷியினின்றும் வெளிவந்த 'வஞ்சிமாநகர்' என்ற வியாசத்தின் முடிவுரையாக "கொங்குகுடபுலமாம்" என்று தந்துணிபு கூறப்பட்டுள்ளது. இது, கொங்கிற்கருவூர்வஞ்சியைக் குடபுலவஞ்சியென்று நிலைநாட்டுதற்கு எழுப்பிய 'வஞ்சிமாநகர்' என்னும் வியாசத்துக்கு அடிப்படையாக வைக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கையை வலியுறுத்தும்பொருட்டு 'வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பு' எனத் தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டியமண்டலங்களாக வரைந்துகொண்டு அவை குடபுலம், குணபுலம், தென்புலம் என்னும் பகுப்பிற் சேரர்க்குரிய குடபுலமும், கொங்குமண்டலமும் ஒன்றேயாம் என்னுங்கருத்தால், அது மேற்றிசைக்கணுள்ள நிலம் எனப் பொருளுரைக்கப்பட்டது. அக்குடபுலமென்னுஞ்சொல் திசைப் பெயரடுத்த பெயராயிருத்தலால், இன்ன இடத்திலிருந்து குடபுலம் எனப் பிரசித்திபெற்ற ஓரிடத்தை எல்லையாகச்சுட்டி வரைந்துகொண்டாலல்லது அக்குடபுலமென்ற பெயர்க்குப் பொருளுணர்ச்சியுண்டாகமாட்டாதென்

பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம். ஏனெனில், திசைப்பெயர்களெல்லாம் யாதேனும் ஓரெல்லையை அவாவிநிற்குமாகையால் எதிலிருந்து குடபுலம் என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும்; அதற்கு இயைபிறிதான குணபுலத்திலிருந்து குடபுலம் என்று கூறின் அக்குணபுலம் என்பது திசையடுத்தபெயராதலால் அதனை யறிதற்கு அதற்கு இயைபிறிதான பழையகுடபுலமே எல்லையாகவேண்டும்; வேண்டவே ஒன்றனையொன்று பற்றுதலால், இன்ன இடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குண்புலமெனவும், இன்ன இடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குடபுலமெனவும் அறியமுடியாததாகும்; ஆகவே, அங்கிலேயில் கொங்கு குடபுலமென்றுகூறுதல், மதுரை குடபுலம் என்று கூறுதல்போற் பொருளற்றதாகவே முடியுமென்பது யாவருமறியத்தக்கது.

ஆனால் குடபுலமென்றசொல்லுக்குப் பொருளுணர்ச்சியேயில்லையோவெனில்! இங்குக்கூறிய சேரமண்டலவாசகமான குடபுலமென்ற சொற்பொருளுணர்ச்சி உண்மையான குடபுலத்திலுண்டாவதன்றிக் கொங்கிலுண்டாகமாட்டாதென்று கூறியதல்லது, இன்ன இடத்திலிருந்து என எல்லைபெறப்பட்ட சாதாரண திசையடுத்தபெயராகிய குடபுலம் என்னும் சொற்பொருளுணர்ச்சியும் கொங்கிலுண்டாகமாட்டாதென்றுகூறியதில்லையெனவுணர்க. இன்னஇடத்திலிருந்துஎன்னும் எல்லைகாட்டாது கூறும் சேரமண்டலவாசகமான குடபுலம் என்னும் சொல்லுக்கு உண்மையான் சேரமண்டலத்திற் பொருளுணர்ச்சி யுண்டாகுமென்பதைப் பின்பு குடபுலம் என்னும் சொற்பொருளாராய்ச்சியிற்காட்டுதல்கொண்டறியலாம். இதனால் இன்ன இடத்திலிருந்து கொங்குகுடபுலம் என்று நிச்சயிக்கமுடியாதநிலைமையில் "கொங்கு குடபுலம்" என்று வாளாகூறும்வாக்கியத்தால் தொடர்மொழிப்பொருளுணர்ச்சி யுண்டாகமாட்டாதென்பது பொதுவாகக் காட்டப்பட்டது.

2. இனி, கொங்கு குடபுலமாம் என்னும் வாக்கியத்தில் எழுவாயாய்நிற்கும் கொங்கு என்னும் சொற்குப் பொருள் யாதென விசாரிப்பாம். வாதகக்ஷியிலுள்ள "வஞ்சிமாநகர்" என்ற வியாசத்துள்ளே 'கொங்கு' என்ற சொல்லின்பொருள் விளக்கவேண்டி, கொங்கன் என்னும் சேரனால் ஆளப்பட்டமையால் அது 'கொங்கனாடு' என்றும்,

'கொங்கு' என்றும் பெயர்பெற்றதென்று கூறி, "கொங்கனெனவிள்ளுங் கோதைநனியாண்டதொரு கொங்குவளநாடு" * எனப் பிரமாணமுங் காட்டப்பட்டுள்ளது. அஃதுண்மையேயாகுக. அக்கொங்கன் வந்தானுதற்குமுன்னே அந்நாடு இன்னபெயருடையதாயிருந்ததென்று விளங்காமையால் அது முன்பு காடாயிருந்திருக்கலாமென்றும், அதனை முதன்முதலில் நாடாக்கியாண்டவன் கொங்கன் என்னும் இயற்பெயருடையானொருசேரனென்றும், அந்நாடுண்டாகவே அதற்குப் பெயரிடவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தபொழுது அக்கொங்கன்பெயரால் அது கொங்கனாடு என வழங்கப்பட்டதென்றும் கொள்ளவேண்டும்; கொள்ளவே, கொங்கனுக்குமுந்தியே சேரர்பரம்பரையிருந்ததென்றும், அப்பரம்பரையிலுள்ள சேரர்களிருந்தாண்டுவந்தநாடு கொங்கனாட்டின் வேறாயிருக்கவேண்டுமென்றும், அந்நாட்டையாண்டவர்சேரராதலால் அது இன்றும் சேரநாடு † என்னுமொருபகுதியையுடைய கடன்மலைநாடாமென்றும் அறியப்படுதலால், கொங்குவேறு; குடபுலமாகிய பழையசேரர்நாடுவேறு என்பதே பெறப்பட்டு, கொங்கு குடபுலமாம் என்பது சித்தியாதாயிற்று.

3. இவ்வாறன்றிப் பழையசேரராண்டுவந்தநாட்டினையே கொங்கன் என்னும் சேரன்வந்து சிறப்பாயாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதென்றுகொள்வோமாயின், அது அச்சேரனாலாளப்பட்ட சேரமண்டலமாகிய குடபுலமுழுதையு முணர்த்தும்பெயராயிருக்கவேண்டும். சேரமண்டலப்பகுதியாகிய குட்டநாடு முதலியவற்றிற்கு, கொங்கனாடு என்னும் பெயர்வழக்கில்லாமையால் அது பொருந்தாதென்க.

4. இனி, பழைய சேரநாடாகிய குடபுலத்தின் கீழ்பாலாகிய ஒருபகுதியைக் கொங்கன்என்னும் சேரன் பிரித்தாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதெனில், அதற்குமுன் அந்நாடு பெயரில்லாதிருந்ததா என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும். பொதுமையிற் சேரமண்டலமென்று பெயர்பெற்றிருந்து அதிலொருபாகம் கொங்கனுக்குரியதானதுபற்றிக் கொங்கனாடாயிற்று எனில், அக்கொங்கன் சேரமண்டலாதி

* வஞ்சிமாநகர் பக்கம் 5.

† கடன்மலைநாட்டின் 'சேரநாடு' என்று ஒருபகுதி இன்றும் நியாயஸ்தல வியவகாரங்களில் வழங்கப்பட்டுவருகிறதென்று பாலைக்காட்டுச் ஸ்ரீமான் ராவ்பகதூர் ஐ. சின்னசாமிபிள்ளையவர்கள் சொல்லத் தெரிந்தேன்.

பதியான் பேரரசனா? அல்லது சிற்றரசனா? என்ற வினாவெழுகின்றது. பேரரசனாயிருந்தானென்றால் தொன்றுதொட்டு வழங்கிவந்த பிரதானப் பெயரைமாற்றி வேறு புதுப்பெயர் வைக்கவேண்டியகாரணமில்லை; சிற்றரசனாயிருந்தானென்றால் அவனாலாளப்படும் அந்நாடு சேரமண்டலத்தின் பிரதானராச்சியமாகமாட்டாதன்றே! இவ்வாறாகவும் அக்கொங்குநாடு சேரரது பிரதானராச்சியத்தினின்றும்வேறென்றேகொள்ளப்படுதலால் கொங்குகுடபுலமாமென்று ஒன்றாகக்கூறுதல் பொருந்தாததாயிற்று.

5. இன்னும் இக்கொங்குநாடு, ஆதிதொட்டுப்பெருகியநிலையிலில்லையென்றும், நாளடைவிற்பெருகியதனால் தொண்டைநாடுபோல இக்கொங்குநாடும் ஒரு தனிமண்டலமாயிற்றென்றும், அதனாற் பின்பு தமிழ்நாடானது சேரமண்டலம், பாண்டியமண்டலம், சோழமண்டலம் தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் என ஐந்துமண்டலங்களையுடையதாயிற்றென்றும் வாதகக்ஷியால் அங்கீகரிக்கப்பட்டு "வியன்றமிழ்நாடைந்து" * எனப் பிரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது. அதன்படி, குடபுலமாகத் தாம்சொல்லும் அக்கொங்குமண்டலத்தின் பெருக்கம் அதனையடுத்துள்ள குணபுலமாகிய சோழமண்டலத்தின் ஒரு பாகத்தைத்தன்னகத்துக்கொண்டன்றோ பெருகியிருக்கவேண்டும்? † அப்படியானால், கொங்குமண்டலத்தின் கீழ்கடைசியை யடுத்து, பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள ஆனிலைக்கருவூரும், கொல்லிமலையுமுள்ள நிலங்கள், பழைய நூல்களிலும் சிலாசாசனங்களிலும் சோழர்க்குரியனவாகச்சொல்லும் பிரமாணவாக்கியங்களைத் தழுவி எதிர்வாதகக்ஷிக் கநுகூலமாயும், வாதகக்ஷிக்குப்பிரதிகூலமாயும் சோழருடையனவாகவே முடிதலால், கொங்கு குடபுலமென்றுசொல்லவேயிடமில்லாமற்போவதுமன்றி, அதற்குவிரோதமாகக் கொங்குகுணபுலமென்று சொல்லவு மிடங்கொடுக்கும்போலிருக்கிறது.

இனிக் கொங்குநாடு நாளடைவிற்பெருகியதற் கிவ்வாறுகாரணம் சொல்லாமல் சேரர்நாட்டையே தன்னகப்படுத்திப்பெருகியதென்று கொண்டாலும், குடபுலமாகிய அச்சேரமண்டலத்திற் கொங்குமண்டலத்தரசர்க் குரிமையில்லையெனக்காட்டிக் கொங்குவேறு குடபுலம் வேறு என்பதையேவலியுறுத்தி வாதகக்ஷியையே விரோதிப்பதாகும்.

(தொடரும்)

"செந்தமிழ்"

---

* இக்கருத்து வஞ்சிமாநகர் 5, 6-வது பக்கங்களிற் காண்க.

† வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பைத்தவிர்த் தமிழ்நாட்டில் வேறு வெற்றுநிலமில்லையென்னும் தங்கொள்கை இங்கு மறக்கற்பாலதன்று.

ஸ்ரீ:

கனம். ஈ; எஸ்; மாண்டேகு அவர்கள் விஜயம்.

குடியாட்சியும் பிரஜாதிபத்தியமுமே தேசநன்மைக்கு முக்யமான ஸாதனங்களாகுமென்று கருதப்படும் இக்காலத்தில், நமது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாமந்திரிக்கு இருக்கும் சக்தியையும் குணத்தையும் எடுத்துச் சொல்லப்புகுதல் மிகையாகாது. இந்தியாமந்திரியே இந்தியாவினது வாழ்வுக்கும் தாழ்வுக்கும் உத்தரவாதியானவர். இவரே, ஏகாதிபத்திய பார்லிமெண்டில் நின்று இந்தியாவைப்பற்றி வாதித்து நன்மைதேடவேண்டியவர். இப்போது நம் இந்தியாமந்திரியாக இருப்பவர் ரைட் ஹானரபில் மிஸ்டர் எட்வின் ஸாமுவேல் மாண்டேகு என்பவராகும். இந்த ஸ்ரீமான் இப்போது நமக்கு நன்மைபுரிவதொன்றே முழுநோக்கமாகக் கொண்டு நம்மிந்தியாவில்விஜயம்செய்து பல ராஜதானிகளிலும் சென்று மௌனமாகவும் சம்பீரமாகவும் இருந்து இந்தியர்களது உள்நோக்கத்தை யறிந்துவருகிறார். இவர்களைப்பற்றி நமது பாதநேயர்கள் அறிய விரும்புவார்களாதலால், அவர்களது சரித்திரச்சுருக்கமும் அவரது இந்தியாவிஜயமும் சொல்லப்படுகின்றன.

மிஸ்டர் மாண்டேகு 1879-ம் வருஷத்திற் பிறந்தவர்; இவரே காபினெட்டில் இளம்வயதுடைய மெம்பராவார். இவர் வைட்சேபல் பார்லிமெண்டில் முன்னம் மெம்பராக இருந்த காலஞ்சென்ற லார்ட் ஸ்வேத்லிங் என்பவரது இரண்டாவது புத்திரர். இவர் கேம்ப்ரிட்ஜில்உள்ள க்ளிப்டன், ட்ரினிடி கலாசாலைகளிற் கல்விபயின்று, கேம்ப்ரிட்ஜ் யூனியன் கூட்டத்துக்குத் தலைவராகவும் இருந்தவர். இவருடைய ஸகோதரராகிய இரண்டாவது பேரன் ஸ்வேத்லிங் (The second Baron Swaythling) என்பவர் லண்டனிலுள்ள ஸாமுவேல் மாண்டேகு அண்டுகோ என்னும்பாங்கிற்குத் தலைவராகவிருக்கிறார். நடுத்தரமான கட்டுடைய சரீரமும் கரியநிறமும் கரிய சுருண்ட கேசங்களும் அன்புநிறைந்த முகமும் ஒளியுள்ளகண்களும் உடைய இவரைப்பார்த்த முதல் தடவையிலேயே இவர் உலகத்துக்கு உபகாரஞ்செய்யப் பிறந்தவர் என்று யாரும் தெரிந்து

கொள்வார்கள். இவரது முகம், இவர்க்குத் தந்திரமும் ஊக்கமும் நிதானமும் உபகாரசிந்தையும் இருக்கின்றன வென்பதை வெளிப்படுத்தும். இத்தகைய அருமையான குணம் வாய்ந்திருக்கும் தன்மையினாலேயே, இவர் யூதகுலத்திற் பிறந்தவராயினும் யாராலும் வெறுக்கப்படாமல் விரும்பப்பட்டு அதிவிரைவில் உயர்ந்த பதவிக்கு ஏறினவர்.

சுதந்திரத்தைப்பற்றிப் பெரியவாதம் நடந்து கொண்டிருந்த காலமாகிய 1906ம் வருஷத்தில்தமது 27ம் வயதில் மிஸ்டர் மாண்டேகு கேம்ப்ரிட்ஜ்ஷையருக்குப் பிரதிநிதி மெம்பராகப் பார்லிமெண்டிற் பிரவேசித்தார். முன் முதன் மந்திரியாக இருந்த மிஸ்டர் ஆஸ்க்வித் என்பவர், இவரது பெருந்தன்மையான தோற்றத்தைக்கண்டு இவரது குணங்களையும் சக்திகளையும் கவனித்து இவரைத் தமது பார்லிமெண்டரி ப்ரைவேட் மந்திரியாக ஏற்பாடு செய்துகொண்டார். 1906-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம் வரையில் அதாவது நான்குவருஷங்கள் மிஸ்டர் மாண்டேகு இந்த உத்யோகத்திலமர்ந்திருந்தார். இவரது 31-ம் வயதில் இவரது நான்குவருஷ அநுபவத்திலேயே இவர்க்கு இருந்த தேர்ச்சியைக்கவனித்து இவர்க்கு இந்தியாமந்திரியின் அண்டர் செக்ரிடேரிஸ்தானத்தைக்கொடுத்தார்கள். 1910 ம் வருஷமுதல் 1914 ம் வருஷம்வரையில், அதாவது பொக்கிஷத்தின் வரவுசெலவுக் கணக்கின் காரியதரிசியாக நியமிக்கப்படும் வரையில் இந்திய செக்ரிடரி ஸ்தானத்தை நன்றாக நடத்திவந்தார். அவர் அந்தஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்குத் தேடிவைத்த சில நன்மைகளின் அங்குரங்களே இப்போது இந்தியாவுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றன.

தமது அரசாங்க வரிக்கணக்கைப்பற்றிப்பேசினபோது மிஸ்டர் மாண்டேகு தமது உயர்ந்த கொள்கைகளையும் கருணையையும் காட்டியிருக்கிறார். மிகுந்த கவலைக்கிடமான இக்காலங்களிற் சட்ட சபையிலிருக்கும் இந்தியமெம்பர்கள் அரசாட்சிமுறைகளை எடுத்து வாதிக்கத் தகுதியற்றவர்களாக இருக்கின்றார்களென்று நாம் நன்றாக

அறிந்திருக்கிறோம். 1910-ம் வருஷத்தில் இவரது பேச்சில் இவர் கொண்டிருந்த மனோவுறுதியையும் எவ்வித விஷயங்களையும் நிர்ப்பயமாய் எடுத்துச்சொல்லும் ஆற்றலையும் நாம் நன்றாய் உணர்ந்திருக்கிறோம். மனத்திலுற்றதை மறைக்காமற் சொல்லிப் பொதுநன்மைக்கும் சுதந்தரத்துக்கும் பாடுபடுமவர்களிடத்தில் இவர்க்கு அதிக நம்பிக்கையும் பிரியமுமுண்டென்பது சொல்லாமலே விளங்குகின்றது. இவர்க்கு, இந்தியநாடானது மேனாட்டைப்போல் அவ்வளவு சீக்கிரத்தில் மாறுபாட்டை யடையாதிருப்பினும் கூடியசீக்கிரத்தில் ஒரு மாறுபாட்டையடைந்து மற்ற நாடுகளைப்போல் ஆகவேண்டுமென்ற நோக்கம் பூர்ணமாக இருக்கிறதாக, இவருடைய கபடமில்லாத பேச்சுகளிலிருந்து நாம் அறிகிறோம்.

“இந்தியாவில், ஹிந்துமதமானது உலகத்தில் யாருங்கண்டு ஆச்சரியப்படும்படி தாய்நாடாகிய இந்தியாவின்மேல் அபிமானத்தைக் காட்டும்படியாகக் கற்பிக்கிறது. அவர்களது தெய்வபக்தியே தேசபக்தியையும் வற்புறுத்துகிறது.” என்றும் அவர் சொல்லியிருக்கிறார். இந்தியாவுக்குப் பலவித நன்மைகளையும் இங்கிலாந்துதான் நாடித்தரவேண்டும் என்னும் உயர்ந்தகொள்கையையும் உடையவராவார். இவ்வளவு பெருந்தன்மை வாய்ந்தவரே நமது நாட்டு மந்திரியாகவும் நியமிக்கப்பட்டு நமது உள்ளக் கருத்தையுள்ளபடி அறிந்து போவதற்கு நமது நாட்டில் விஜயம் செய்திருக்கிறார் என்றால், இந்தச்சமயமல்லாத வேறு எந்தச்சமயத்தில் நாம் நமது உட்கலகங்களையும் கலக்கங்களையும் ஒழித்துவிட்டு நமது நோக்கங்களையும் குறைகளையும் வேண்டுகோளையும் தாராளமாக வெளியிடப்போகிறோம்? இவரையல்லாமல் நமக்காக நமது விஷயங்களையும் நோக்கங்களையும் பார்லிமெண்டில் எடுத்துச் சொல்லப்போகிறவர் யார் இருக்கிறார்? இவரது அதிகாரத்தின் கீழல்லாமல் மற்ற வேறு யாருடைய அதிகாரம் வந்தபோது நாம் நமது குறைவை நீக்கிக்கொள்ள முடியும்?

1912-ம் வருஷத்தில் மிஸ்டர் மாண்டேகு இந்தியாவில் விஜயம் செய்து பல இந்தியத்தலைவர்களையும் சந்தித்துப்பேசி இந்தியா

வின் குறைகளை உள்ளன உள்ளபடியே அறிந்துகொண்டு போயிருக்கிறார். தனது பிரயாணத்தைப்பற்றிக் காமன் சபையில் அவர் பேசினபோது பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"இந்தியாவில் பிரிட்டிஷ் ஆபீஸர்களும் இந்திய ஆபீசர்களும் மற்றவர்களும் தங்களாற் கூடிய உதவியை எனக்குச்செய்து தந்த நன்றியை நான் மறக்கவும் முடியாது; சொல்லாமல் இருக்கவும் முடியாது. காலும் செல்லும் நிலைமையையநுசரித்து அவர்களுக்கு நான் அவசியம் செய்யவேண்டிய கைம்மாறுகளைச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக என்னால் ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்தே தீர்வேன்."

மிஸ்டர் மாண்டேகுவானவர், நிஷ்கபடமும் ஊக்கமும் உள்ளவர். பப்ளிக் ஸர்விஸ் கமிஷனைப்பற்றி 1913 ம் வருஷத்தில் இவர் பேச நேர்ந்தபோது "வீண் பேச்சுமாத்திரம் எப்போதும் பயன் தராது. கிரியாம்சையில்தான் காட்டவேண்டும். இந்தக்கமிஷனை யுண்மையானபடி நடத்தும்படியும் பலனளிக்கும்படியான நிலைமையில் உழைக்கும்படியும் பிரிட்டிஷார்களையும் இந்தியர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக்கமிஷனில் உண்மையும் பிரியமும் தந்திரமும் கொண்டு இருகிறத்தாரும் உழைத்தால் இந்தியரின் முன்னேற்றத்துக்குக் காரணங்களைக் காணலாகும்" என்று உண்மையை எடுத்துப் பேசியிருக்கிறார்.

மிஸ்டர் மாண்டேகு 1914 ம் வருஷத்தில் பொக்கிஷத்து வரவு செலவுக் காரியதரிசியாகநியமிக்கப்பட்டுப் பிறகு 1915 ம் வருஷ ஜனவரிமாதம் ப்ரிவி கௌன்சிலராகவும் நியமிக்கப்பெற்றார். 1915ம் வருஷத்தில் இவர் மந்திரிஸபையில் பிப்ரவரி மாதத்தில் நுழைந்தாராலும் மேமாதத்தில் தமது பழமை யுத்தியோகமாகிய பொக்கிஷ வேலைக்கே திரும்பும்படி நேர்ந்தது. ஆனாலும் 1916 ம் வருஷம் ஜனவரிமாதத்தில் லங்காஸ்டர் பிரபுவின் ஆலோசனைத் தலைவராக மந்திரிசபையில் நுழைந்து, ஜூலைமாதத்திற் போர்க்களவாட மந்திரியாகவும் நியமிக்கப்பெற்றார். இந்த நிலை

மையிலிருந்துதான், பிரதம மந்திரி மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் அவர்கள் இவரை இந்தியாமந்திரி ஸ்தானமாகிய இப்போதிருக்கும் ஸ்தானத்துக்கு நியமித்தார்கள். மாண்டேகு தாம் இந்திய விஷயங்களில் மிகவும் அன்பு காட்டுபவரில் ஒருவராக முன்னமே பல உபந்யாஸங்கள் மூலமாகக் காட்டியிருக்கிறார்.

இந்தியாவைத் தூக்கத்திலும் அடிமைத்தனத்திலுமே வைத்திருக்கவேண்டுமென்று எண்ணுகிற ஆங்கில இந்தியர்கட்கு உடன்படாமலும் அவர்க்கு ஹிதமாகப் பேசாமலும், மெஸபடோமியா கமிஷன் ரிப்போர்ட்டின்போது காமன் சபையில் இவர் நிஷ்கண்டகமாகவும் நிஷ்கபடமாகவும் பேசினதினால், ஆங்கில இந்தியர் பலர்க்கு இவரிடத்தில் வெறுப்புத் தோன்றினதால், "இவரை இந்த ஸ்தானத்தில் நியமித்தது, மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கு ஒரு மடமைக் குணத்தைத்தான் காட்டுகின்றது" என்று மிகக்கோபத்துடன் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் உபகாரியும் சத்தியவாதியுமான இவரை இந்த உயர்ந்த உத்தியோகத்திலமர்த்தி அநுபவமுறையில் இந்தியாவுக்கு நன்மையைத்தேட இடமும் கொடுத்து உதவிய மஹோபகாரியாகிய மிஸ்டர் லாய்ட் ஜார்ஜை இந்தியர் மனதார வாழ்த்துவதுடன் இந்த உபகாரிக்கும் அந்த மஹோபகாரிக்கும் நீண்ட அதிகாரத்தையும் உண்மையான வாழ்நாளையும் கொடுத்துதவும்படி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியச் சீர்திருத்தவிஷயமான நல்ல அபிப்பிராயங்களை இவர் மெஸபடோமியா கமிஷனில் வெளியிட்டிருக்கிறபடியாலும்' தாம் இதற்குமுன் பல உபந்யாஸங்களை இந்தியவிஷயமாகச் சொன்னதிலிருந்தும் இப்போது இந்த உத்யோகத்தை ஏற்றுக்கொண்டபிறகும் மாற்ற முடியாதென்று வெளியிட்டிருக்கிற படியாலும் இவர் காலத்திலேயே நாம் நமக்கு ஆகவேண்டிய பெருநன்மைகளையும் எதிர் பார்க்கிறோம். இவர் இந்திய ஆபீஸில் நியமிக்கப்பெற்ற தினமாகிய 1917-ஆகஸ்டுமீ 20 தேதியை ஒரு உத்ஸவதினமாகவே

இந்தியர் எண்ணினார்கள். ஆகையால் நாம்கோருகிற ஸ்வயஆட்சி நிபந்தனைகளை ஹோம் ரூல்லீக் காங்கிரஸ் முஸ்லீம்லீக் இவற்றின் கோரிக்கைகளை யநுசரித்து நமகது உதவவேண்டிய முயற்சியை அவர் செய்யும்படி எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

மதராஸ் யுத்தநிதி விஷயமாக மகாகனம்பொருந்திய கவர்னரவர்கள்,

போர்முனையில் நின்று யுத்தம்செய்துகொண்டிருக்கிற நமது பட்டாளங்கள் மற்றொரு குளிர்காலத்தையும் போர்முனையிலிருந்தே காலங்கழித்துக் கஷ்டப்படவேண்டுமென்பது அவசியமாகிவிட்டபடியால், மதராஸ் யுத்தநிதியின் அத்யக்ஷர்கள், மதராஸ் ஹாஸ்பிடல் கப்பல் முதலியவற்றை இன்னும் நடத்திவரும் முறையில் ஆலோசிக்கவேண்டிய முறையிலிருக்கிறார்கள். அந்தயுத்தநிதிவிஷயமாகத் தென்னிந்திய மஹோபகாரிகள் மிகுதியும் அளித்திருக்கிறார்களானாலும் அவர்கள் மறுபடியும் இவ்விஷயத்திற் கவனம்செலுத்தும்படி தூண்டவேண்டியிருக்கிறது. சமீபத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட யுத்தநிதி ரிபோர்ட்டினால், 1917–மார்ச்சுவரையில் பலநன்கொடைகளாலும் பல மாதச்சந்தாக்களாலுமே காரியம் நடந்தேறிவந்ததென்றுதெரியவரலாகும். மாதச்சந்தாத்தொகைகள், மாதச்செலவுக்கு ஒருதரமாவது ஒத்தபடிகிடைக்காததினால் மூலதனத்தையும் எடுத்துச் செலவுசெய்யும்படி நேரிட்டது. இம்முறையில் ஐம்பதினாயிரம் ரூபாய் வரையில் குறைந்துவருகிறது. இப்படிச் சென்றால் மூலதனமும் அழியநேரிடும். இப்போதிருக்கும் நிலைமையையனுசரித்து மூலதனத்தையும் சரிப்படுத்தி மாதச்செலவுக்காக வேண்டிய தொகையையும் எப்பாடுபட்டேனும் வசூல்செய்ய வேண்டியதும் அவசியமாக ஏற்பட்டிருக்கிறது.

மதராஸ் பிரஸிடென்ஸியையும் மற்ற தென்னிந்திய மாகாணங்களையும் மற்றமாகாணங்களுடன் ஒத்துப்பார்க்கும்போது, இந்தச் சென்னை மாகாணத்துக்கு மற்றமாகாணங்களைப்போல் இந்தயுத்த

விஷயமாக அதிககஷ்டங்கள் ஸம்பவிக்கவில்லையென்று உறுதியாகச் சொல்லலாம். ஆகையால் மதராஸ் யுத்த நிதி, மதராஸ் ஹாஸ்பிடல் ஷிப் இவற்றின் அத்யக்ஷர்கள், சென்னை மாகாணத்தாருடைய ராஜபக்தியையும் பெருந்தன்மையையும் உலகப்பிரசித்தியாக்குவதற்காக மற்றொருமுறை முயற்சிசெய்திருக்கிறார்கள். இந்த நிதியை ஆரம்பித்தகாலமுதல் போஷித்துவந்தஉபகாரிகள் தங்கள் உபகாரவிஷயத்தினால் தங்களுடைய பெருந்தன்மையை அநுபவமுறையில் நன்றாகக் காட்டியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களது தொகையைக் குறைக்கவாவது நிறுத்தவாவது தற்போது கூடாமையைப்பற்றி மிகவும் துக்கிக்கிறோம்.

இப்போது மறுபடியும் ஒருமுறை அந்தஉபகாரம் நடைபெறவேண்டுமென்று வற்புறுத்தவேண்டியிருக்கிறது. இது இன்னும் சிறிதுகாலம் தள்ளமுடியாத அவசியத்துடன் நடைபெறவேண்டியதாகவும் இருக்கிறது. ஆகையால் யுத்தநிதி விஷயமாகப் பெரிய மனது பண்ணும் உபகாரிகளை இன்னொருமுறை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுவதாவது:—தாங்கள் தனிமையிலாவது ஒருகூட்டத்திலாவது தங்களது தாராளசிந்தையை நன்றாகக்காண்பித்து, அவசியம் ஆகவேண்டிய இந்தச்சமயத்தில் யுத்தநிதிக்கு வேண்டிய உதவிகளைச் செய்வீர்களென்று கோருகிறோம்.

(ஒப்பம்.) பெண்ட் லெண்ட்
(மதராஸ் கவர்னரும்,
மதராஸ் யுத்தநிதித்தலைவரும்.)

கவர்ன்மெண்ட் ஹவுஸ் மதராஸ்
நவம்பர்—1917.

தொகை யனுப்பப்படவேண்டிய இடம்:—
மதராஸ்—கவர்ன்மென்ட் ஹவுஸ்
மிலிடெரி செக்ரிடெரி அவர்கட்கு.

இந்த வேண்டுகோட்கிணங்கித்தொகை செலுத்தியுதவிய உபகாரிகளின் பேரும் தொகையும்:—

	ரூபாய்.
மகாகனம் கவர்னர் அவர்கள்.	1500
பெருமைதங்கிய திருவாங்கூர் மஹாராஜா அவர்கள்—ஜி, வி. எஸ். ஐ; ஜி, ஸி, ஐ, இ.—	100,000
வெங்கடகிரி ராஜா அவர்கள்.	50,000
பீதாபுரம் ராஜா அவர்கள்—	50,000
பெருமை தங்கிய கொச்சி ராஜா அவர்கள்—	20,000

(இவர்கள் தங்கள் மாதச்சந்தாவை 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக்கி யிருக்கிறார்கள்.)

பார்லக்கிமிடி ஜமீன்தார் அவர்கள்—	10,000
வாத்வான் ராணி ஸாஹிபா அவர்கள்—	10,000
சந்தர் ராஜா அவர்கள்	6,000
மெஸர்ஸ் ரேன் பென்னட் அண்டுகோ லிமிடெட்	3,000
மெஸர்ஸ் கார்டன் உட்ராப் அண்டுகோ	2500
மெஸர்ஸ் வில்ஸன் அண்டுகோ	2500
மெஸர்ஸ் பாரி அண்டுகோ	2500
மெஸர்ஸ் பெஸ்ட் அண்டுகோ லிமிடெட்	2500
மெஸர்ஸ் W. A. பியர்ட் ஹெல் அண்டுகோ லிமிடெட்	2500
கொலங்கா வீரவாம் மாகாணங்களின் ஜமீன்தார் அவர்கள்	2000
பொப்பிலி மஹாராஜா அவர்கள் ஜி. ஸி. ஐ. இ.	1000
மெஸர்ஸ் பி. ஆர் அண்டுசன்ஸ் லிமிடெட்...	1000
,, ஸ்பென்ஸர் அண்டுகோ லிமிடெட்—	1000
,, ஒக்ஸ் அண்டுகோ லிமிடெட்—	1000
,, மெக்டவல் அண்டுகோ லிமிடெட்—	1000
,, பிரேஸர் அண்டு ராஸ்—	1000
மிஸ்டர் எப். டி. பென்னட்—	1000
மிஸ்டர் வேல்ஸ்—	500
மிஸ்டர் எவரட்—	500

பத்ராசலம் அண்டு பொலவஞ்சா ஜமீன்தார் அவர்கள்.	500
மெஸர்ஸ் ஸிம்ஸன் அண்டுகோ—	250
ஸர். பி. எஸ். சிவசுவாமி ஐயர் அவர்கள் கே, ஸி, எஸ், ஐ; ஸி, ஐ. இ.	200

(இந்தக்கடிதம் மதராஸ் கவர்ண்மென்ட் ராணுவக்காரியதரிசியிடமிருந்து வந்தது.)

பத்திராதிபர்.

விடுகதைவினவுக்கு விடை.—

வித்யாபாநு தொகுதி-கூ பகுதி-கஉ-ல் 474-ம் பக்கத்தில் தோன்றிய விடுகதைவினவுக்கு விடைவருமாறு:—

(1) பொற்பமருங் கோநகரம் போற்றவரு விற்பனர்சேர்
கற்பகவிநாயக கலாசாலை—யிற்பயிலும்
கந்தன்குமரன் கருதுவது கற்றவர்க்கு
கந்தமணிமேகலை.

T. A. நடேசன்.
கண்டரமாணிக்கம்.

---

(2)

மணிமேகலை	... ...	ஐந்தெழுத்துப்பதம்
ம ... லை	... ...	வெற்பு
... ... கலை	... ...	துகில்
மணி ...	... ...	இரத்தினம்
... மேகலை	... ...	வஞ்சியர்களிடைக்குப்பூண்.

R. Chockalingam,
Coimbatore.

வைத்தியக்குறிப்பு.

பால்சுரப்பதற்கு.

நியூயார்க் நகரத்துடாக்டரான சார்லெஸ் H. டன்கன் என்பவர், " ஒரு ஸ்திரீயின் தேஹத்தில், அவளுடைய முலைப்பாலையே மெஞ்சிகாபரணக் கருவிபால் (Hypo-dermine injection) சர்மத்திற்குத்திச்செலுத்தியதில் (15 துளிபால்) அவளுக்குப்பால் மிகவும் சுரந்துவந்தது. இவ்விதமே பசுக்களுக்கும் செய்தாற் பசுக்கள் அதிகப்பாலைக் கொடுக்கும் என்று அவர் எழுதுகிறார்.— Practical Medicine.

சுலக்ஷணை.

(தொகுதி 9-ல் 464-ம் பக்கத் தொடர்ச்சி.)

காளி, " நாம் போனபோது அவன் விழித்துக்கொண்டான்."

வீரசிங்கம், "இல்லை, இல்லை. நீ பொய் சொல்லுகிறாய்"

காளி, " நம்முடைய வேலையை ஆரம்பிக்கப் போகும் சமயத்தில் அவனைக் காப்பாற்றவேண்டுமென்று ஒருவிதமான உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று."

வீரசிங்கம், " உனக்கா? காளி? நீ அப்படிப்பட்டவளல்லவே உன்காரியமெல்லாம் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியவையாயிருக்கின்றன. உன் நடத்தைக்குக் காரணம் என்னவாயிருந்தாலும் சரி. எனக்கு நாளைக்கு இருநூறு ரூபாய் வந்துவிட வேண்டும்."

காளி, " நீ அதை நிச்சயமாய் நம்பலாம். நாளைக்கு அவசியம் பணம் கொடுத்துவிடுகிறேன். சாராயமிருக்கிறது. குடித்துக் கொண்டு கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருப்போம்."

வீரசிங்கம், " நீ எப்பொழுதும் அனுவசியமாய்ப் பேசமாட்டாயே."

காளி, " சில சமயங்களிற் பேசுவேன், மனிதர்களுடைய குணம் எப்பொழுதும் ஒரேமாதிரியாகவா இருக்கிறது? புவனாலயம் ஜமீன் குடும்பத்தைப் பற்றி ஏதோ சொன்னாயே."

வீரசிங்கம், "ஆம், அது நடந்து இப்பொழுது பத்தொன்பது வருஷங்களாகின்றன. அப்பொழுது மானவன் என்ற கிழட்டு ஜமீந்தார் உயிரோடிருந்தான். துஷிதன் என்பவன் என்னை அமர்த்தினான். அவன் எப்படி இறந்தானென்பது மாத்திரம் எனக்குத் தெரியவில்லை"

காளி, " நீ சொல்வது வேடிக்கையாய் இருக்கும் போலிருக்கின்றதே. ஆகையால் அந்தக் கதையை முழுவதும் சொல் கேட்கிறேன்."

வீரசிங்கம், கொஞ்சம் சாராயத்தைக் குடித்துவிட்டுக் கதையை ஆரம்பித்தான். "துஷிதன் என்பவன் கிழட்டு ஜமீந்தாராகிய மானவனுடைய தம்பி மகன். அவன் மிகவும் காலியாய்த் திரிந்தான். ஆகையால் மானவன் துஷிதனுக்குத் தன் ஆஸ்தி சேராதபடி செய்ய ஒரு இளம்பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அவளுக்கு இரண்டு பெண்ணும் ஒரு ஆணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன. துஷிதன் என்னைக்கண்டு மானவனுடைய ஆண் குழந்தையைத் தொலைத்துவிட வேண்டுமென்றான். அவன் தகுந்த கூலி கொடுத்தபடியால் நானும் சம்மதித்தேன். அதற்காகப் புவனலயம் போய், வேலைக்காரி கையிலிருந்த குழந்தையைப் பறித்துக்கொண்டு காட்டுக்குள் நுழைந்து விட்டேன். வெகுதூரம் சென்றபிறகு ஒரு இடத்தில் உட்கார்ந்து குழந்தையினுடைய ஆடைகளையெல்லாம் கழற்றி மடியில் வைத்துக் கொண்டேன். அப்பொழுது கிளிமூக்கு மாங்காய் போன்ற மச்சமொன்றைக் குழந்தையின் தோளிற் பார்த்தேன். அதைக் கொல்லப் போகும் சமயத்திற் சமீபத்திற் சில குரல்கள் கேட்டன. உடனே எனக்குப் பயமுண்டாகிவிட்டது. பேசிக் கொண்டிருந்தவர்கள் கையுங்களவுமாய் என்னைக் கண்டுவிட்டால், குழந்தையைக்கொல்லும் குற்றத்திற்காகத் தூக்கு மேடையில் ஏறவேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உதித்தது. குழந்தையை அங்கேயே உயிரோடு போட்டுவிட்டு வெகுவிரைவாய் ஓடினேன். வெகுதூரம் சென்றதும் துஷிதனுக்கு என்ன சொல்வது என்ற யோஜனை உண்டாயிற்று. குழந்தையின் வஸ்திரங்களைக் காட்டி, அதன் தோளிலிருக்கிற மச்சத்தைப் பற்றிச் சொல்லி அதைக் கொன்றுவிட்டதாகச் சொன்னால் அவன் நம்புவான் என்று நினைத்தேன். வஸ்திரங்களில் மதிமான் என்ற பெயர் இருந்தபடியால் துஷிதன் நான் சொன்னதை உடனே நம்பிவிட்டான்."

வீரசிங்கம் சற்று நின்று கொஞ்சம் சாராயம் குடித்து மறுபடியும் கதையை ஆரம்பித்தான்; "இந்தச் சம்பவம் நடந்து மாதம் ஒன்றாயிற்று. அதுவரை குழந்தை திரும்பி அகப்பட்டதாகச் சமாசாரம் ஒன்றும் பிறக்கவில்லை. ஆகையால் அங்கே பேசிக்

கொண்டிருந்தவர்கள் குழந்தையை எங்கேயாவது தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டும் அல்லது அது அவர்கள் கண்ணுக்குத் தட்டுப்படாமல் அங்கேயே கிடந்து மடிந்து போயிருக்கவேண்டும் என்று நினைத்தேன். பின்பு கிழட்டு ஜமீந்தார் அசௌக்கியமாய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அவர் வியாதியால் இறக்காவிட்டால், இரவில் வீட்டிற்குள் நுழைந்து அவரைக் கொன்றுவிட்டால் துஷிதனிடத்திலிருந்து பணம் பிடுங்கலாம், என்று எண்ணிக்கொண்டு, சில சிநேகிதர்களுடன் புவனாலயம் சென்றேன். போனவிடத்தில் ஜமீந்தார் இறந்துவிட்டாரென்றும், அவனுடைய குழந்தை அகப்பட்டுவிட்டதென்றும் எனக்குத்தெரிய வந்தது. குழந்தை அகப்பட்டதைப் பற்றி எனக்கு ஆச்சரியம் உண்டாகவில்லை. ஏனெனில் நான் போட்டுவிட்டுவந்த இடத்திலிருந்து, அதை யாராவது கண்டு எடுத்துக்கொண்டுபோய்க்கொடுத்திருக்கலாம். நானும் என் சிநேகிதர்களும் சற்றுநேரம் யோஜனை செய்து, "வெறுங்கையோடு திரும்பக்கூடாது, ஜமீன்அரண்மனைக்குட் புகுந்து ஏதாவது திருடவேண்டும்" என்று தீர்மானித்தோம். அன்றிரவே அரண்மனைக்குள் நுழைந்தோம். நாங்கள் நுழைந்த சப்தம் கேட்டு, அங்கே பெருங் கூக்குரலுண்டாயிற்று. ஒரு நிலவறைக்குள் ஒளிந்துகொண்டோம். அவ்விடத்தில் துஷிதனுடைய பிரேதம் தண்ணீரில் மிதப்பதைக் கண்டோம்."

இங்குச்சற்றுநேரம் கதையை நிறுத்திச் சாராயங்குடித்து மறுபடியும் சொல்லத் துவக்கினான்:—"நானும் என் சிநேகிதர்களும் பிணத்தைத் தூக்கி அதன்மேலிருந்த நகைகளையெல்லாம் கழற்றிக் கொண்டோம். சுவேதவதியிலுள்ள சோமநாதன் என்றவைத்தியன் ஏதோகாரியமாய்ப் புவனாலயத்திற்கு அச்சமயம் வந்திருந்தான் என்பது எங்களுக்குத் தெரியும். அவன் பிரேதங்களைப் பரிசோதிப்பதில் அதிக ஆசையுள்ளவன். துஷிதனுடைய பிரேதத்தை அவனிடம் கொண்டுபோனால், அவன் அதை விலைகொடுத்து வாங்கிக்கொள்வான் என்று நினைத்து அப்படியே செய்தோம். சோமநாதன் பிரேதத்திற்கு நல்லவிலை கொடுத்தான். பிறகு நாங்களெல்லோரும் சுவேதவதிக்குத் திரும்பினோம்."

காளி, "நீ சொன்னகதை மிகவும் வேடிக்கையாயிருக்கிறது."

வீரசிங்கம், "சோமநாதன் இப்பொழுது சுவேதவதியிற் பிரபல வைத்தியனாயிருக்கிறான். நாளை இரவு ஒன்பதுமணிக்குப் பணம் கொண்டுவர மறந்துவிடாதே."

காளி, "நான் என்ன சொன்னாலும் சொன்னபடி செய்வேன் என்பது உனக்குத் தெரியுமல்லவா?"

வீரசிங்கம், "குடிசையை விட்டுப் புறப்பட்டுத் தன்னிருப்பிடம் சென்றான்."

சொன்ன வாக்குத்தவறாமல், மறுநாள் இரவு ஒன்பதுமணிக்குக் காளியாயி பேயாண்டி கடைக்குப்போய், அக்குத் தனக்காகக் காத்திருந்த வீரசிங்கத்தினிடம் ரூபாய் இருநூறும் ரொக்கமாய் எண்ணிக் கொடுத்தாள்.

பெரிய விருந்து.

இப்பொழுது நாம் நீலாம்பாள் கிருகத்திற்குச் செல்லுவோம். நீலாம்பாள் யாரென்பதை வாசகர்கள் மறந்துபோயிருக்கலாம். அவள் தான் அம்புஜம் சூடாமணி ஆகிய இருவருக்கும் அத்தை. நீலாம்பாளும், அம்புஜமும், சூடாமணியும் ஒரேவீட்டில் வசித்து வந்தார்கள்.

மதிமான் காளியாயியின் வீட்டில் தங்கின தினத்திற்கு அடுத்த நாள் சாயந்திரம் ஆறுமணிக்கு அம்புஜம் தன்னறையில் தனியே உட்கார்ந்திருந்தாள். அவ்வறையில் நேர்த்தியான சாமான்கள் இருந்தன. அழகான சலவைக்கல்லாற் செய்யப்பட்டசிலைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. கண்ணாடிக்கட்டுகளில் நல்லவாசனையுள்ள மல்லிகை முல்லை ரோஜா சண்பகம் இருவாட்சி முதலிய புஷ்பங்கள் பரப்பப்பட்டிருந்தன. ஒருமேஜையின்மேல் சித்திரம் எழுதும் கருவிகள் கிடந்தன. இவையெல்லாம் அறையில் வெகுநேர்த்தியாய்த் தகுந்தஇடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

அம்புஜம் விருந்திற்குப்போவதற்காக உயர்ந்த ஆடை ஆபரணங்களைத் தரித்திருந்தாள். அவள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்

தாள். அருகில் இருந்த மேசையின்மேல் ஒரு புத்தகமும் ஒருகடிதமும் இருந்தன. புத்தகம் கம்பராமாயணத்திற் சுந்தரகாண்டம். அதைவாசிப்பதில் அவளுக்கு அதிகப்பிரியமுண்டு. கடிதம், கங்காதரனிடமிருந்து நீலாம்பாளுக்கு வந்தது. இப்பொழுது அவள் கடிதத்தையாவது புத்தகத்தையாவது வாசியாமல் ஆழ்ந்தயோசனையில் இருந்தாள். சொர்ணவிக்ரகம்போன்ற சரீரத்தையுடைய அம்பஜத்தின் மனதிற் கவலை ஏற்பட்டிருந்தது. தனக்கு வாழ்க்கைத்துணைவனை மதிமானை நிச்சயித்திருக்கும் ஏற்பாட்டை நினைக்கும்பொழுது அவள் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. அவள் அவனை விரும்பாதது மாத்திரம் அவ்வளவு வருத்தத்தை உண்டுபண்ணவில்லை. அவள்மற்றொருவனைநேசித்திருந்தாள். பின்வருமாறு அவள் சிந்தித்தாள்; "ஆம், அவர்தான் இயற்கையிலேயே பிரபு. அவருக்குஅழகு செய்ய நகைகளும் உயர்ந்த ஆடைகளும் வேண்டியதில்லை. ஆஸ்தியும் வேண்டியதில்லை. நான் அவரைநேசிக்கிறேன். ஆனால் நான்ஒருக்காலும் அவரைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது. அவரும் என்னை நேசிக்கிறார் என்பது எனக்குத்தெரியும். ஆம், நான் சிந்தாமணியை நேசிக்கிறேன்." அவள் இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்பொழுது அவளுடைய அத்தை நீலாம்பாள் அவளிருக்கும் இடத்திற்கு வந்தாள்.

"அகத்தினழகு முகத்திற்றெரியும்," "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்" என்றபடி தான் யோசிப்பதை நீலாம்பாள் தன் முகத்திலிருந்து அறிந்து கொள்ளுவாளோ என்று பயந்து, அம்புஜம் உடனே சொல்லுகிறாள், "அத்தை! வண்டி தயாராயிருக்கிறதா?"

"ஆம், அம்புஜம், இப்பொழுது மணி ஆறரை ஆகிறது. சுலக்ஷணை ஏழுமணிக்குச் சாப்பிடுவது வழக்கம். அவள் குறித்தகாலம் தவறமாட்டாள்," என்று நீலாம்பாள் சொன்னாள்.

அம்புஜம், "சுலக்ஷணையின் வீட்டிற்குப்போக அரைமணி நேரம் செல்லமாட்டாது. ஆகையாற் சற்றுநேரம் கழித்துப் போகலாம்."

நீலா. "கங்காதரனுடைய கடிதத்தைப் பார்த்தாயா?"

அம்புஜம், "முதலில் தங்களைவந்து நேரில் பார்க்கிறேன் என்று சொன்னவர், இப்பொழுது ஏதோ அலுவலிருக்கிறது வரமுடியவில்லை என்று எழுதியிருக்கிறார்."

நீலா. "உன் சகோதரன் சூடாமணியும் விருந்திற்கு வருவானல்லவா?"

அம்புஜம், "விருந்திற்கு வருவாரென்றுதான் நினைக்கிறேன். ஆனால் இன்று நான் அவரைப் பார்க்கவில்லை."

நீலா. "மதிமான் இன்று உன்னை வந்து பார்த்தானா?"

அம்புஜம், "அவன் சனிக்கிழமைமுதல் இங்குவரவில்லை."

நீலா. "இப்பொழுது செவ்வாய்க்கிழமை சாயந்திரம். மூன்று நாள் பூராவாய் உன்னை வந்துபார்க்காம லிருந்துவிட்டானா? ஆனால் என்ன? ஜமீன் குடும்பங்களில் இது சகஜந்தான். ஜமீன் குடும்பத்தாருக்கும் மற்றைய ஜனங்களுக்கும் பழக்கவழக்கங்களில் அதிக வித்தியாசமுண்டு."

அம்புஜம், "நான் மற்றைய ஜனங்கள் வீடுகளிற் பிறந்திருந்தால் நலமாயிருக்கும்."

நீலா. "நீ இவ்விதம் சொல்லுவது நன்றாயில்லை. நான் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு ஏராளமான ஆஸ்தியையுடைய கணவனைத் தேடினேன்."

அம்புஜம், "நீங்கள் என்னிடத்தில் தாயைப்போல் பக்ஷமாயிருந்து வருகிறீர்கள் ஆயினும்——......"

நீலா, "மதிமானை நீ நேசிக்கவில்லையென்று சொல்லுவாய், உயர்குடும்பங்களில்நடக்கும்கல்யாணங்களெல்லாம் மாப்பிள்ளை பெண்ணின் பிரியத்தின்படியா நடக்கின்றன? நான் இப்பொழுது அனுபவிக்கும் ஆஸ்தியை எனது ஆயுள் உள்ளமட்டும் தான் அனுபவிக்கலாம். நான் இறக்குந்தருவாயில் என்னிஷ்டப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஆஸ்தியாயிருந்தால், உன் மனதிற்குப் பிடித்த புரு

ஷனுக்கு, அவன் ஏழையாயிருந்தாலும், உன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பேன். அதிருக்கட்டும். இப்பொழுது நேரமாயிற்று. சுலக்ஷணாவின் வீட்டிற்குப் போகவேண்டும்."

இருவரும் வண்டியிலேறிக்கொண்டு புவனாலயம் ஜமீந்தார் வீட்டிற்குச் சென்றார்கள். சுலக்ஷணா விலையேறப்பெற்ற ஆடையாபரணங்களைத் தரித்திருந்தாள். அவளுடைய குமாரத்திகளாகிய விமலாவும் அசிதாவும் அவளைப்போலவே நன்றாய் உடுத்திக்கொண்டிருந்தார்கள். சுலக்ஷணாவும் அவள் புத்திரிகளும் நீலாம்பாளையும் அம்புஜத்தையும் வரவேற்றார்கள்.

நீலா, "மதிமானெங்கே?"

சுலக்ஷணா, "நான் ஒவ்வொரு நிமிஷமும் அவனை எதிர்பார்க்கிறேன், இன்று சாயந்திரம் விருந்து நடக்கப் போகிறதென்று அவனுக்குத் தெரியும்——————"

சுலக்ஷணா பேசிமுடிப்பதற்குள் ஜமீந்தார் நமசிவாயம் என்பவன் வந்தான். அவன் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தான். மதிமானுடைய கார்டியன்களில் அவன் ஒருவன். சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்து சிலகாலங்களில் வெளியூர்களுக்குப்போய் வேலைபார்ப்பது அவனுடைய வழக்கம். அவனுக்கு வயது சுமார் அறுபது இருக்கும். கொஞ்சம் கனமான சரீரத்தை உடையவன். பேசும்போதெல்லாம் 'உண்மை' 'உண்மை' என்று சொல்லும் வழக்கத்தையுடையவன். அதைப்பற்றி ஜனங்கள் ஒருகதை சொல்லிக்கொள்வார்கள். ஜமீந்தார் நமசிவாயத்துக்கு யாரோ ஒருவன் கடன்கொடுக்கவேண்டியிருந்ததாகவும் கடனாளி கடனைக் கொடாததனால் நமசிவாயம் நியாயசபையிற் பிரியாது செய்ததாகவும், விசாரணையன்று கடன் கொடுக்கவேண்டியவன் கடன் வாங்கவில்லையென்று சொன்னதாகவும், நியாயாதிபதி அது வாஸ்தவந்தானா என்று நமசிவாயத்தைக் கேட்க, அவன் வழக்கம்போல் முதலில் 'உண்மை' என்று சொல்லிப் பிறகு முழுவதும் சொல்வதற்குள், அவர் (நீதியதிபர்) பிரதிவாதி தான் கடன் வாங்கவில்லை என்று சொன்னதற்கு வாதி ஒத்துக்கொண்டபடியால் கேஸை (Case) த் தள்ளிவிட்டோம் என்று தீர்மானம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்தக்கதை பொய்யா மெய்யா என்று நாம் நிச்சய

மாய்ச் சொல்லமுடியாது. ஆனால் 'தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்' என்றபடி 'உண்மை' 'உண்மை' என்று சொல்லுகிற பழக்கம் அவனை விட்டு நீங்கவில்லை. யாராவது அவனை நீ திருடனா என்று கேட்டாற் கூட முதலில் 'உண்மை' என்று சொல்லிவிட்டுப் பிறகுதான் நான் திருடனல்ல என்று சொல்லுவான். இத்தகைய குணங்களோடுகூடிய வனுயிருந்தான் மதிமானுடைய கார்டியன்களிலொருவனாகிய ஜமீந் தார் நமசிவாயம் என்பவன். வக்கீல் லக்ஷ்மணசர்மா என்பவன் மதிமானுடைய மற்றொரு கார்டியன்.

நமசிவாயம்வந்து கொஞ்சநேரத்திற்கெல்லாம் லக்ஷ்மணசர்மா வும் வந்தான். ஜமீந்தார், மிராசுதார், ஜாகிர்தார், திவான்பஹதூர், ராவ்பஹதூர், ராவ்சாஹிப், ஆனரபிள் முதலிய பட்டங்களையுடைய அனேகரும், 'வீரகம்பீர ஜயப்பிரதாப' என்ற இவைபோன்ற நீண்ட வால்களைத் தம்பெயர்களுக்கு முன்னும் பின்னும் சேர்த்துக்கொண்டி ருக்கும் அனேக கனவான்களும் விருந்திற்கு வந்திருந்தார்கள். அங்கு வந்திருந்தவர்களிற் சூடாமணிப் பிரபுவும் ஒருவன். "நேரமாயிற்றே மதிமானை இன்னும் காணோமே" என்று சுலக்ஷணா எண்ணிக்கொண் டிருந்தபொழுது அவனும் வந்துவிட்டான். மணி ஏழு அடித்து ஐந்து நிமிஷமாயிற்று. எல்லோரும் வந்துவிட்டார்கள். குறித்தகா லம் தவறாமல் விருந்தை ஆரம்பிக்கலாம் என்று நினைத்துச் சுலக்ஷணா சந்தோஷமாய் விருந்தினர்களைப் பார்த்தாள். அச்சமயத்தில் வேலைக் காரனொருவன் அங்கு வந்தான். அவன் உண்டி பரிமாறுவதற்கு உத் தரவுகேட்க வந்திருக்கிறான் என்று சுலக்ஷணா நினைத்தாள். அவளரு கிற் போய் அவன் இரகசியமாய்ச் சொன்னதாவது, "யாரோ ஒரு ஸ்திரீ வந்திருக்கிறாள். தங்களை அவள் முக்கியமான காரியமாய் அவ சியம் பார்க்க வேண்டுமாம்."

"நீ அவளுக்குத் தகுந்த பதிற்சொன்னாயா?" என்று சுலக்ஷணா தாழ்ந்த குரலாய்க் கோபத்துடன் கேட்டாள்.

(இன்னும் வரும்)

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி.

மதிப்புரை.

பெண் கல்வி;—இதனது டிசம்பர்மாதத்துப் பத்திரிகை வரப்பெற்றோம். வழக்கம்போல் விஷயங்கள் எழுதப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் ரிக்வேதச் சிறுகதைகளும் சரித்திரச் சுருக்கமும் அவசியம் கவனிக்கத் தகுந்தவை.

விவேகோதயம்:—இதனது டிசம்பர் மாதத்துப் பத்திரிகை வரப்பெற்றோம். இதனுள் வழக்கம்போல் விஷயத் தொடர்ச்சிகள் எழுதப் பெற்றிருக்கின்றன.

செந்தமிழ்.—இதனது ஐப்பசிமாதத்துப் பத்திரிகை வரப்பெற்றோம். இது, சிலசஞ்சிகைகளாகத் தன்பெயருக்கும் தான் தோன்றிய தோற்றத்துக்கும் இதனை யாரம்பித்தோரது கொள்கைக்கும் இணங்க ஆராய்ச்சி விஷயத்தில் நுழைந்து உழைக்கிறது. இந்தவிதமான ஆராய்ச்சியே சரித்திர ஆசிரியர்களுக்கு ஒரு நல்விருந்தாகி அவரது சரித்திர நூல்களில் என்றும் நிலவுவதாகும். இம்மாதத்துப்பகுதியில் வந்துள்ள ஆராய்ச்சிகளனைத்தும்அவசியம்படிக்கத்தக்கன.

தோத்திரப்பாமாலை-பலமததெய்வங்களையும் வணங்கிய கடவுள்வணக்கப்பாக்களுடன் தொடங்கியுள்ள இந்தச்சிறுநூல் (Vellore) வேலூர் போலீஸ் ஸ்கூலைச்சேர்ந்த ஸ்ரீ. வி. சுப்பையர் அவர்களால் இயற்றப் பெற்றுள்ளது. கடவுள் வணக்கங்களைக்கொண்டே இதனை யாக்கியோரது மதம் பொதுமதப் பற்றுடைய ஆஸ்திகமத மென்று அறியக்கிடக்கிறது. அன்றியும் பக்தியிற் சிறந்துளார் என்பதும் வெளியாகிறது. செய்யுட்போக்கினால் இதனை இயற்றியார்க்குக் கவிபாடும் வன்மை யியற்கையாயுளதொன்றுமாமென்றும் ஊஹிக்கக்கிடக்கிறது. ஆங்கிலக் கல்விமுறைபயின்று அதனோடு போலீஸ் துறையில் இறங்கியுழைத்துவரும் இவர்கட்கு இச்செயல் அமைந்துகிடந்தது தேசாபிமானம் பாஷாபிமானம் முதலிய காரணங்களாலேயே என்றும் அறிகிறோம். இவர் இறங்கியுள்ள இச்செயல், மற்றை ஆங்கிலக் கல்வி யபிமானிகட்கும் ஒருதூண்டுகோலாக இருக்கு

மென்றும் துணிகிறோம், இதன் விலை 0—6—0. வேண்டு வோர் இதன் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

பூர்ணசந்திரோதயம்:—இதனது கார்த்திகை மாதத்துப் பத்திரிகை வரப்பெற்றோம். இதனுள் வழக்கம்போற் பல நன்மையான வியாஸங்கள் எழுதப் பெற்றிருக்கின்றன. சுதேசுக்கல்வி என்னும் விஷயம் அநுபவ முறையாகவே எழுதப்பெற்றுள்ளது; அவசியம் படிக்கத்தகுந்தது. பிரபத்தி வித்தையும் தக்க ஆதாரங்களுடனும் அநுபவத்துடனும் எழுதப் பெற்றிருக்கிறது.

கதைப்பூங்கோத்து:—இது மதுரை, பரிதிமாற்கலைஞன் புத்தகசாலையின் முதற்பிரசுரமாகப் பதிப்பிக்கப்பெற்று முப்பதுசிறுகதைகளடங்கிய ஒரு சிறுகொத்து. இக்கதைகள் சிறுவர் படிக்கத் தகுந்தன. பலநீதியைப் புகட்டுவன. இதனை யாக்கியோர் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமத் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் B. A. அவர்களது குமாரர் ஸ்ரீ வி. சூ. நடராஜன் என்பவராவார். இவர், தம்பிதாவினிடத்தில் மிகுந்த பக்தி பூண்டுள்ளார் என்பது, இவர் தமது புத்தக சாலைக்கு இட்டிருக்கும் பெயரானே நன்கு விளங்குகிறது. இப்புஸ்தகத்தின் விலை 0—2—6. வேண்டுவோர் இபற்றியார்க்கு எழுதிப்பெறுக.

பத்திராதிபர்.

பத்திரிகையாராய்ச்சி.

சிரோப்ரமணம் அல்லது தலைசுற்றல்.

இந்த விகாரமானது, சிரஸில் இயற்கைக்கு விரோதமாக இரத்தவோட்டம் நேரிடுவதால் அடிக்கடி ஸம்பவிக்கின்றது என்றும், இன்னும் அதனுடைய தத்வத்தைப் பரீக்ஷித்துப்பார்த்ததில், ஸாதாரணமாக ரத்தவோட்டம் மூளையில் முரண்படுவதால் அல்லது அளவில் மிகக்குறைவதால் ஸம்பவிப்பதாகத் தெரியவருகிறதென்னும் Family Doctor. என்னும் பத்திரிகை கூறுகிறது. தேஹம் இங்குமங்கும் தள்ளாடி விழாத ஒரு ஒழுங்கான சீர்தூக்கிய நிலைமையிற் காக்கும் சக்தி (Balancing power.) குறைவுபடுவதாலேயே

வெகு ஸாதாரணமாய்த் தலைசுற்றல் உண்டாவது வழக்கம். அப்பொழுது அம்மனிதன் நிற்கமுடியாமற் பூமியில் விழுவான்.

இந்த நிலைமை பாண்டுரோகத்தைக் காரணமாகக்கொண்டு ஸம்பவித்ததானால், தலையைச்சாய்த்து, உடல் தலையைவிடச் சிறிது உயர்ந்து இருக்குமாறு செய்யவேண்டும். மூளைக்கு இரத்தம் சுறுசுறுப்பாய் ஓடும்படி ஸௌகர்யம் செய்வது அவசியம். அப்படிச் செய்தால், மூளை தனது இயற்கையான வேலையைச் செய்யமுயன்று தலைசுற்றலும் நிவ்ருத்தியாகும்.

இருதயம் பலங்குன்றித் துடித்துவருவதும் தலைசுற்றலுக்கு ஒரு காரணமாகும். அப்போது இருதயம் மூளைக்கு இரத்தத்தை ஒழுங்கினமாக மூளையின் இரத்தக்குழாய்களின் வழியாய் இறைக்கும். ஆகவே தலைசுற்றல் இதனாலும் உண்டாவது வழக்கம்.

வயிற்றுப்பொருமலால் இரைப்பை மேற்புறமாகத் தள்ளப்பட்டு இருதயத்தின் செயலுக்கு ஒருவாறு இடையூறு நேரிடுவதும் உண்டு; அப்போதும் தலைசுற்றல் ஸம்பவிக்கக்கூடும்.

திடீரென்று ஒரு மனிதன் தலையைக் குனிந்து கீழ் நோக்கிப் பார்த்தாலும், அவன் பலக்குறைவுள்ளவனானால், அவனுக்குத் தற்காலம் மூளையில் இரத்தவோட்டம் குறைந்து இவ்விகாரம் உண்டாவது வழக்கம்.

எக்காரணத்தினால் தலைசுற்றல் உண்டானாலும், உடனே தலையைச் சாய்த்துக் கீழே படுத்துக்கொள்வது அவசியம். உடனே வெந்நீரைக் கொடுப்பதும், குளிர்ந்த ஜலத்தால் தலையை நனைப்பதும் நன்மையைச் செய்யும்.

வெயிலில் அதிகமாகத் திரிவதால் நேரிடக்கூடிய தலைசுற்றலும் பலர்க்குண்டு, அவர்கள் உடனே நிழலில் வந்து, தரையிற் படுத்துக்கொள்ளல்வேண்டும்.

வைத்திய கலாநிதி.

உ

நவுலியப்பன் கும்பாபிஷேகம்.

பிங்கள௵ தைமீ ௰௨ புதன்கிழமை யன்று தினம் பர்மாவாகிய நவுலியப்பன் என்றவூரில், நகரத்தார்களால் ரூ ௯௰௫ வரையிற் செலவுசெய்து புதிதாய்த் திருப்பணி அமைக்கப்பெற்ற நகரத்தெண்டாயுதபாணி ஆலயத்தில் சண்முகப்பெருமானை எழுந்தருளச்செய்து கும்பாபிஷேகம் நிரம்பவும் விமர்சையாய் நடைபெற்றது. அதற்கு நவுலியப்பன் நகரத்தார் வேண்டுகோளின்படி டாங்கோ, பிஞூ, கன்னிக்குவின் நகரத்தார்கள் நகரவிருந்து விசாரணையையும், டையூ நகரத்தார்கள் தண்ணீர்ப்பந்தல், மாலை சிற்றுண்டி விசாரணையையும், பேகுவக்கோம் நகரத்தார்கள் காலைப்பலகாரம், காப்பி விசாரணையையும், கன்னிக்குவின் நகரத்தார்கள் மகா அபிஷேகம்-ஸ்வாமி புறப்பாடு, விசாரணையையும், பீந்தசா—நகரத்தார்கள் சந்தன தாம்பூலாதி வழங்குதலையும், பெயிஞ்சலோ, சவுட்டக்கா நகரத்தார்கள் பெரியஉக்ராணம் சின்னஉக்ராணம் விசாரணையையும் ஏற்றுக்கொண்டு அவரவர்கள் ஏற்றுக்கொண்ட விஷயங்களை அன்போடு நிரம்பவும் விமரிசையாய் நடத்திவைத்தார்கள். கும்பாபிஷேகக் கண்காட்சியைப் பார்க்கப் பர்மாவிலுள்ள வைசிய சிகாமணிகள் ஏராளமாய் வந்திருந்தார்கள். மேற்படி சண்முகநாதப் பெருமானுடைய சன்னிதானத்தில் ௯௨ இரவு 8-மணிக்கு ஏமேதீன் ஈ. கா. சோம. ஏஜண்டு கடியாபட்டி ஸ்ரீமாந்- பழநியப்பசெட்டியாரவர்கள் புலால்மறுத்தல் என்னும் விஷயத்தை நிரம்ப, அழகாக உபந்யசித்தார்கள். கும்பாபிஷேகத் தன்று மாலை 3-மணிமுதல் 7-மணிவரையில் ஸ்ரீமது கைலாஸ பாகவதரவர்கள் வள்ளியம்மை சுயம்வரம் என்னும் விஷயத்தைப் பக்கவாத்தியத்துடன் நிரம்ப விரிவாயும் அழகாயும் கதாப்பிரசங்கம் செய்தார்கள். மேற்படி பிரசங்கம் முடிந்தவுடன் டையூ ராம. சு. ராம. (கோனாபட்டு) ஸ்ரீமாந் இராமன்செட்டியாரவர்கள் ஷெ ஐயரவர்கள் செய்த கதையைப்பற்றி, ஆமோதித்து அதன்பின்னர்த் தமிழின் பெருமையென்னும் விஷயத்தை நம்மனோர்கள் சுலபமாய் அறிந்துகொள்ளும்படி நிரம்ப விரிவாகவும் அழகாகவும் உபந்யசித்தார்கள். அதன்பின் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை மங்களமாக நிறைவேறியது. அன்று ராத்திரி 9-மணிக்கு ஸ்ரீசண்முகப்பெருமான் மயில்வாகனத்தில் ஆரோகணித்துப் பியாண்டு, மேளவாத்தியம், சிவநாமம், தீவட்டி மத்தாப்பு விருதுகளுடன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு நகரத்தார்களுடைய கடைகளுக்குவந்து காட்சி கொடுத்து அன்பர்கள் எல்லோருக்கும் விபூதிப்பிரஸாதம் அளித்து 2-மணிக்குத் தமது ஆலயத்தில் வந்து வீற்றிருந்தனர்.

சுபம்.

முருகானந்தம்.

சபைநிழ்ச்சிக் குறிப்புகள்.

அவிநாசி
சைவசித்தாந்த சபையின்
3-வது ஆண்டு நிறைவுவிழா.

1917 ஆம் ஆண்டு டிசம்பர்மீ 7, 8, 9உ களில் இச்சபையின் விழா, சென்னைப் பிரசிடென்ஸி காலேஜ் தலைமைத் தமிழ்ப்போதகாசிரியர் மகாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களின் தலைமையின் கீழ் வெகு சிறப்பாய் நடைபெற்றது. முதல்நாள் காவித்தண்டலம் ஸ்ரீமான் வேதாசலமுதலியாரவர்கள் முதலிய பல வித்வசிரோமணிகள் பிரசங்கங்களும், இரண்டாநாள் சேலம் பிரம்மஸ்ரீ திம்மப்பையரவர்கள், அவிநாசி கந்தசாமி ஓதுவார் முதலியோருடைய பிரசங்கங்களும், இருமொழிப்புலமையும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவரும், பழந்தமிழ் நூல்களாகிய சாக்கறையிற் புகுந்து அந் நூலாசிரியர் சேமித்துவைத்திருக்கும் நண்பொருள் நலங்களையெல்லா மெளிதிலுணர்ந்து யாவரும் வியக்கும்வண்ணம் தெள்ளியநடையில் உபந்நியசிக்கு மாற்றல் வாய்ந்தவருமாகிய மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "சேக்கிழார் கவித்துவம்" என்ற உபந்நியாசமும் நடைபெற்றன. கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்ப் பேசுமாற்றலையுடைய ஸ்ரீமான் செட்டியாரவர்கள் வருகையை அறிந்த அந்நாட்டிலுள்ள பல அறிஞர்களும், பல பிரபுக்களும் விஜயஞ்செய்திருந்தனர். ஸ்ரீமான்-செட்டியார்வர்கள், நூலாசிரியர் காவியத்தை நடாத்தும் முறையினையும், நூலாசிரியர் எடுத்தாளும் உவமையின் நயங்களையும், இக்காலத்துப் புலவர் போன்று எதுகை மோனை முதலிய நயங்களைக்கருதிப் பதங்களைப் பிரயோகம்பண்ணாது கருத்துடை அடையாகப் பதங்களைப் பிரயோகம் பண்ணியிருக்கும் நலங்களையும், ஆசிரியர் அவ்வப் பாத்திரத்தின் குலத்திற்கேற்ற வழக்கச் சொல்லினைப்பெய்து நூலை நடாத்தியிருக்கும் முறையினையும், ஏனைய நூலாசிரியர்களெல்லாம் உலகநடையையுடையவராதலின் உலவிஷயத்தில் ஈடுபட்டு உலகானுபவத்தையே உருவக உவமைகளில் வைத்துக் கூறுகின்றனர்; இந்நூலாசிரியர் அருள்வயப்பட்டாராகலின் இவர் கூறும் உவமைமுதலிய அலங்காரங்களெல்லாம் இறைவன்பாற்படுத்தியே கூறியுள்ளாரென்பன பிறவும் யாவரும்வியக்கும்வண்ணம் எடுத்துக்காட்டி இனிமையாகஉபந்யசித்தார்கள். அச்சபையோரெல்லாம் இன்பக்கடலுளாழ்ந்து பரவசமுற்றிருந்தார்கள். பிரம்மஸ்ரீ அக்கிராசனரவர்களெழுந்து ஏனைய பிரசங்கங்கட்கெல்லாம் முடிவுரை கூறி, இவர்கள் பிரசங்கத்திலுள்ள நலங்களை யெல்லாம் வியந்துகூறினர். மூன்றாம் நாள் திருக்கோவிலூர் சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் உபந்நியாசமும், ஸ்ரீமான் பொ, முத்தையாபிள்ளையவர்கள் பிரசங்க

மும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார்மடத்து மாணவருடைய உபந்நியாசமும் நடைபெற்றதோடு, ஸ்ரீமான் செட்டியாரவர்கள் 'கம்பர்கவிமாட்சி' என்ற அரிய பிரசங்கமும் அந்நாட்டிலுள்ள அறிவாளிகள் பலர் வேண்டுகோளின்படி நடைபெற்றது. ஸ்ரீமான் செட்டியாரவர்கள் கம்பர்கவியில் ஆழ்ந்து கிடக்கும் பொருளின் திட்ப நுட்பங்களை யாவருமுவப்பக் கூறினார்கள். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் இச்சபையின் அங்கமாக ஒரு தமிழ்க்கலாசாலையும், புத்தகசாலையொன்றும் நிறுவவேண்டுமெனவற்புறுத்திக்கூற, அதனை அவைத்தலைவரவர்கள் ஆமோதித்துக் கல்வியின் அருமை பெருமைகளை இனிமையாகப் பேசிமுடித்தார்கள். அப்புத்தகசாலைக்கு 500 ரூபாய்க்கு நான்வேண்டும் புத்தகங்களை வாங்கிக்கொடுக்கிறேனென ஸ்ரீமான் செட்டியாரவர்களுடன் விஜயஞ்செய்த பனையபட்டி ஸ்ரீமான் சின்னையாசெட்டியாரவர்கள் வாக்களித்தார்கள். இப்பெருந்தகையாரின் வள்ளற்றன்மையினைக்கண்டு, அந்நாட்டுவாசிகள் அகமிகமகிழ்ந்தனர். இக்கலாசாலை மூலதனத்திற்காக ஆண்டெழுந்தருளியிருந்த நகரத் தனவைசிய பிரபுக்களும், ஏனையோருங் கையொப்பமிட்டனர். பின்னர் அவைத்தலைவரவர்களின் முடிவுரையோடு, ஆசகந்தனுதி தாம்பூலம் வழங்க அவிஞசியப்பர் கிருபையாற் சபை பூர்த்தியாயிற்று.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திருச்சி (கிளை)

1917ஆ டிசம்பர்மீ 11உ செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்குத் திருச்சி டவுன் ஹாலில் எக்ஸிகியூட்டிவ் என்சினீர் ஸ்ரீமான் மாணிக்கநாயக்கரவர்கள் தலைமையின்கீழ் நுண்மாண் நுழைபுலனும், கேளாரும் வேட்கும் சொல்லாற்றலும் ஒருங்கமையப்பெற்ற மகிபாலன்பட்டி வித்துவசிரோமணி ஸ்ரீமான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "மணிமேகலை ஆராய்ச்சி" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியசித்தார்கள். அக்காலத்து அந்நகரின்கண் உயர்தரக்கலாசாலைகளில் ஆங்கிலம், தமிழ்ப்புலமை நடாத்தும் ஆசிரியர்கள் பலரும், மாணாக்கர் பலரும் துரைத்தன உத்தியோகத்தினர் பலரும் ஒருங்கு குழீஇ அமர்ந்திருந்தனர். ஸ்ரீமான் செட்டியாரவர்கள்,கொந்தார்குழல் மணிமேகலை நூல் நுட்பங்கொள்வதெங்ஙன், என்பதை முன்னுரையாகக்கொண்டு, பண்டைத்தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களை இந்நூலாசிரியர் நுனித்தறிந்து கூறியிருக்கும் வனப்பினையும், மணிமேகலை உவவனஞ்செல்லுங்காலை வீதியில் எழுந்தபூழியால் அவள்முகம் ஒளிமழுங்கப் புனைந்துரைத்த நலத்தினையும், சாதுவன் என்னும் வணிகன் போய்ச்சார்ந்த தீவின்கண்ணுள்ள நக்கசாரணரது ஒழுக்க வழக்கங்களையும், அச்சாரணர்கட்கு இதோபதேசம் செய்யும் நிலைமையினையும், அவன் ஆசனம் முதலியவற்றின் அழகினையும், அவன் மனைவியோடு இருந்தகாலத்து

39

ஆசிரியர் கூறிய உவமையினையும், சாதுகன் அவர்கள் பாடையினைக்கற்று அவர்கட்கு இதோபதேசஞ்செய்து நல்வழிப்படுத்திய பெருமையினையும், தன்புத்திரனை இழக்கப்பெற்ற இராசமாதேவியின் சோகத்தை மணிமேகலை தனது இனிய உபதேசத்தால் நீக்கியதாக ஆசிரியர் கூறியிருக்கும் திறமையினையும், காண்டலளவையேயன்றி ஏனைய அளவைகளையும் உண்டென உணருமாறு ஆசிரியர் உதாரணவாயிலாகக் காட்டிய நுட்பத்தினையும் "ஈன்றாள்குழவிக் கிரங்காளாகித் தான்தனியுண்ணுந்தகைமையதாயது" எனவறுமையினை விளக்கியிருக்கும் பாங்கினையும் இன்னபிறவற்றையும் விரிவாய்ப்பேசிமுடித்தார்கள். அவையினர்யாவரும் ஆனந்தசாகரத்தின்கண் மூழ்கி இன்புற்றிருந்தனர். ஆங்கிலப் புலவரொருவர் எழுந்து இங்ஙனமாய ஆராய்ச்சிகள் மேனாட்டு வித்துவான்கள் செய்கின்றனரன்றி இந்நாட்டிலுள்ள வித்துவான்கள் இங்ஙனமாய துறைகளிற் சென்று ஆராய்ச்சி செய்கின்றாரிலர் என வியந்து பாராட்டிப்பேசினார். பின்னர் அக்கிராசனர் இவர்தம் பிரசங்கத்தினை வியந்து பேசியதோடு, ஸ்ரீமான் செட்டியாரவர்கள் இங்ஙனமாய ஆராய்ச்சிகளையெல்லாமெழுதிப் புத்தகரூபமாக அச்சிட்டு உதவின் தமிழ்நூல் ஆராய்ச்சி செய்வார்க்கு இது ஒரு பேருதவியாகுமெனக் கூறிமுடித்தார்கள். இரவு 9 மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

திருச்சிக்கோட்டைச் சைவசித்தாந்த சபை.

1917௵ டிசம்பர்௴ 12௳ இச்சபையில் நுணங்குமொழிப் புலவராகிய மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமான் கதிரேசச்செட்டியாரவர்கள் 'கண்ணப்ப நாயனார் விக்ஞானார்த்தம்' என்பதைப்பற்றி உபந்யசித்தார்கள். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் அப்புராணத்திற் கூறியுள்ள பாத்திரங்களையெல்லாம் சைவசித்தாந்த சாஸ்திரங்களிற் கூறிய பஞ்சமலங்களானும் நாயனாரை ஜீவனாகவும், குடுமித்தேவரைப் பதியாகவும் யாவரும் வியக்கும்வண்ணம்பேசியதோடு, இன்னும் இப்புராணத்திலுள்ள நுண்பொருள் நலங்களையெல்லாம் எடுத்துவிளக்கினார்கள். காரியதரிசியவர்கள் வந்தனங்கூற இரவு 9-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

வித்தியாபரிபாலன சங்கம்

நாட்டரசன்கோட்டை.

உபந்யாச நிம்பர் 9.

பிங்கள௵ மார்கழி௴ 30௳க்கு 13-1-18 சிவகெங்கைத் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ M. இராமலிங்கம்பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

மாலை 5-மணிக்குச் சபைகூடிற்று. கடவுள்வாழ்த்து மாணவர்களால் நடைபெற்றது. வேம்பத்தூர் பிரம்மஸ்ரீ சிலேடைப்புலி பிச்சுவையர்குமாரன் பாஸ்கர பாரதியவர்கள் ஈகை என்னும் விஷயத்தைப் பண்டிதபாமரரஞ்சிதமாக ஏற்ற மேற்கோள்களால் நன்குவிளக்கி உபந்நியஸித்தார்கள். மழவராயனேந்தல் பிரம்மஸ்ரீ இராமசாமிபாகவதரவர்கள் மேற்கூறிய விஷயத்தைப் போதிய நியாயங்காட்டி விளக்கினதுடன் வாழ்த்துக்கவிகளும் கூறினார்கள். திரிஸ்ரீ உ. வே. இராமையங்காரவர்கள் அவ்விஷயத்தையே நன்கு விரித்துரைத்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ சு. ப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் அவ்விஷயத்தையே நன்குவிளக்கி வாழ்த்துக்கவிகளும் கூறினார்கள். முடிவில் அக்கிராசநாதிபதியவர்கள் எழுந்து சபையின் முன் பேசினவர்களின் அபிப்பிராயங்களைத்தழுவி அரியசெய்யுள்களால் உதாரணம் எடுத்துக்கூறிப் போதியசான்று காட்டிச் சபையோர்கள் நனிவியக்கும்படி இனிது பேசிமுடித்தார்கள். பின்னர்ச் சந்தனபுஷ்பதாம்பூலம் வழங்க இரவு 9-மணிக்குச் சபை சிறப்பாய் நிறைவேறியது.

14-1-18 }
நாட்டரசன்கோட்டை. } K. V. S. மணிஐயர்.

கோநகர்.

ஞானசம்பந்தநற்சபை.

இதன் மாதாந்தரக்கூட்டம் நிகழும் பிங்களஹ தைமீ 3உ (16-1-18) புதன்கிழமை அம்மன் பொங்கலாதலால் வழக்கம்போல் 4-மணிக்குக் கூடாமல் 6½-மணிக்குக் கூடப்பெற்றது.

கலாசாலைமாணவர்களாற் கடவுள்வாழ்த்துக் கூறப்பெற்றதும் காரைக்குடி கம்பராமாயணப்பிரசாரகர் பிரம்மஸ்ரீ மோ. வெ: கோவிந்தராஜையங்காரவர்களக்கிராசனத்தில் வீற்றிருந்து சீதாப்பிராட்டியின்றனிமை என்ற விஷயத்தைக் கேட்டோர் ஆனந்திக்கும்வண்ணம் மிகவும் விரிவாக வால்மீகிராமாயண முதலிய பல அரிய மேற்கோள்களுடன் உபந்நியசித்தார்கள்.

பின்பு யாவருக்கும் வந்தனோபசாரஞ்செய்யப்பெற்று மங்கலவாழ்த்து நிகழ இரவு 9-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

சம்பந்தன்.